Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 32 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :240 ஆடி 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 26 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## இந்திய தூதரக அதிகாரி வீட்டில் களவு

கொழும்பு, ஜூலை 26

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் அதிகாரியொருவரின் வீடு உடைக்கப்பட்டு, பணம்திருடப்பட்டுள்ளது. பொரளையிலுள்ள 31



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்றுச் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (மேலும் படங்கள் - பக்.07)

வடக்கு, கிழக்கில்

# நீதியான தேர்தல் நடப்பது சந்தேகமே?

அச்சம் வெளியிடுகிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தினர் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளையும் இராணுவமே செய்கின்றது. இந்த நிலையில், அங்கு நீதியான தேர்தல் நடைபெறுவது சந்தேகமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவதில் நியாயம் இருக்கின்றது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார். 31

## சுகாதாரப் பரிசோதகர்கள் விவகாரத்தில் சிக்கல்கள்

சுற்றறிக்கை சட்ட முரண் என்கிறார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஜூலை 26

பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோ 31

## இலங்கை இறுதிப்போரின் போது இந்தியா தலையிடவில்லையாம்!

விமல் வீரவன்ச புதுக்கதை

கொழும்பு, ஜூலை. 26

இலங்கை இரண்டாகப்பிளவுபட்டால் திருகோணமலையை அமெரிக்கா கைப்பற்றிவிடும் என்பதாலேயே இறுதிக்கட்டப்போரின்போது இந்தியா எவ்வித தலையீடுகளையும் செய்யாது, போர் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல்வீ 31

## விக்னேஸ்வரனின் சர்ச்சைக் கருத்தால் மனமுடைந்து வெளியேறினார் மொஹமட்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்களையடுத்து, யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் கண்காணிப்புக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரிகளுள் ஒருவரான ஓய்வுபெற்ற தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மொஹமட், தேர்தல் திணைக்களத்தின் அனைத்துப் பணிகளிலிருந்தும் விலகியுள்ளார்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தொடர்ச்சியாகக் கிடைத்தமையையடுத்து, விசேட கண்காணிப்பு பிரதிநிதியாக ஓய்வுபெற்ற தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மொஹமட்டை தேர்தல்கள் ஆணைக்குழு நியமித்தது.

ஆளும் கட்சி சார்பில் யாழ்ப் 31

பல்கலை. மானியங்கள் ஆணைக்குழுவிடம்

## முடிவை மீள்பரிசீலனை செய்யக்கோருவதை தீர்ப்பு வரும் வரை ஒத்திவைத்தது பேரவை

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் முன்னாள் தலைவரும், மூத்த விரிவுரையாளருமாகிய கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றங்களில் முன்னிலையாவதைத் தடை செய்யும் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் முடிவை மீள் பரிசீலனை செய்யக் கோருவது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை ஆராய்ந்த போதும், நீதிமன்றில் இந்த விவகாரம் இருப்பதால் தீர்ப்பு வரும் வரையில் அதனை ஒத்தி வைப்பது என்று தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் போது கலாநிதி குமாரவடிவேல் குரு 31

## வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டோர் 31ஆம் திகதி வாக்களிக்க ஏற்பாடு

தவிசாளர் மஹிந்த அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

நடமாடும் வாக்களிப்பு நிலையங்களினூடாக வீடுகளில் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

தேசிய தேர்தல்கள் 31

## டக்ளஸின் கூட்டத்துக்கு தடை

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்திப் பணியாளர்களை எதிர்வரும் புதன் கிழமை சந்திப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளு 31

செலான் வங்கியிடமிருந்து உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை ரூ.66,000/-

0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

செலான் தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி



# தேரர்களின் கொட்டத்தை அடக்க கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அறைகூவல்



**யாழ்ப்பாணம், ஜூலை 26**

**இந்த நாட்டில் தேரர்களின் அடாவடித் தனமும் இனவாதப் பேச்சுக்களும் எல்லைகடந்து செல்கின்றன. இனவாதத்தைத் தவிர்த்துவிட்டு எந்தக் காரியத்தை ஆற்றுவதற்கும் அவர்கள் தயாராக இல்லை. இத்தகையவர்களின் கொட்டத்தை அடக்கி தமிழ் இனத்தின் இருப்பை உறுதி செய்வதற்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் வேட்பாளரும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுபவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்.**


அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இனவாதம் ஒன்றே இந்த நாட்டில் அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளது. பல தேரர்கள் ஒவ்வொரு நாளும் பல்வேறு விதமாக இனவாதக் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். 'தமிழர்கள் வன்முறையை நாடினால் சிங்களவர்களின் பதிலடியும் வன்முறையாகத்தான் இருக்கும். கறுப்பு ஜுலையே அதற்குச் சான்று' என்று தேரர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இன்னொரு தேரர் 'யாழ்ப்பாணம் நல்லூர் சிங்களவர்களுக்கு உரியது. சிங்கள இளவரசனே அதைக் கட்டினார் என்று தெரிவித்துள்ளார். மட்டுமல்லாமல் ஜனாதிபதிக்கும் மகா சங்கத்தினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் கருத்துத் தெரிவித்த மகா நாயக்க தேரர்கள் 'வடக்கு - கிழக்கில் உள்ள தொல்பொருள் வழக்குகளை கொழும்புக்கு மாற்ற வேண்டும்' என்று கோரியுள்ளனர். இத்தகைய தேரர்களின் இனவாதத்துக்கு எதிராகக் கதைப்பதற்கும் குரல் கொடுப்பதற்கும் இவர்களுக்கு எதிராகச் செயற்பட்டு தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பைத் தக்கவைப்பதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்த்த பிறிதொரு சக்தி வடக்கு - கிழக்கில் உள்ளதா என்று மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வருகின்ற பொதுத் தேர்தலில் கூட்டமைப்புக்கு எதிராகக் களமிறக்கப்பட்டுள்ளவர்கள் பேரினவாத அரசின் கைக்கூலிகளே. மட்டுமல்லாமல் பெரும்பான்மைக் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படுகின்றவர்கள் கூட்டமைப்பை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். மக்கள் நன்கு சிந்தித்து தமது வாக்குகளை வழங்க வேண்டும். கடந்த பாதையையும் கூட்டமைப்புச் சாதித்ததையும் மக்கள் மறத்தல் ஆகாது - என்றார்.

(ம)

# யாழ். - கொழும்பு ரயில் இன்னும் துரிதமாகும்



கொழும்பு, ஜுலை 26

'யாழ்ப்பாணம்-கொழும்பு ரயில் சேவையை இன்னும் விரைவுபடுத்தும் வகையில், அடுத்த ஆண்டு அனுராதபுரத்திலிருந்து வவுனியா வரையிலான ரயில் பாதை முழுமையாக நவீனமயமாக்கப்படும்' என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பு-யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அனுராதபுரத்திலிருந்து வவுனியா செல்லும் பாதை பல தசாப்தங்களாக மேம்படுத்தப்படவில்லை. எனவே அதனை அடுத்த ஆண்டு நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அனுராதபுரம் வவுனியா ரயில் பாதை அடுத்த ஆண்டு பல மாதங்களுக்கு மூடப்பட வேண்டியிருக்கும் என்று திட்டத்திற்குப் பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரயில் பாதையை மேம்படுத்த ஒரு லட்சத்து 66 ஆயிரம் தொன் தண்டவாளங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

# விடுதலை வேட்கையினது சின்னமான வீட்டை உடைத்தல் வரலாற்று பிழை

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு



வவுனியா, ஜுலை 26

விடுதலை வேட்கையோடு வீட்டை உருவாக்கிய தமிழ் மக்களே அதனை உடைக்கவும் செய்தார்கள் என்ற பிழையான வரலாற்றை உருவாக்கக்கூடாது இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று அனைவரும் கூட்டமைப்பை விமர்சிக்கின்றனர். எனினும் இந்தப் பகுதியிலே இராணுவச் சோதனை சாவடிகளை அமைத்து அடக்குமுறைகளை மேற்கொள்ளும் அரசாங்கத்தை யாரும் விமர்சிக்க முன்வரவில்லை. அதனை கூட்டமைப்பு மாத்திரமே எதிர்த்துவருகின்றது.

நாடாமன்றத் தேர்தலில் முன்னாள் இராணுவ அதிகாரிகள் களம் இறக்கப்பட்டுள்ள நிலையில் எமது தேசியத்தை நசுக்க நினைக்கின்ற ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் சரியான பாடத்தை நாம் புகட்டவேண்டும். இது ஒவ்வொருவரதும் கடமை. அற்ப சொற்ப சலுகைகளிற்காக எமது உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்க முடியாது.

விடுதலை என்ற வேட்கையோடு வீட்டை உருவாக்கியவர்கள் எமது மக்கள். எமது மக்களே அதனை உடைத்தார்கள் என்ற வரலாறு வரமுடியாது. எனவே உங்கள் வாக்கினை எமது பூர்வீகம் சிதைக்கப்படுவதற்கு பாவிக்கப்போகின்றீர்களா அல்லது எமது மண்ணை அபகரிப்பதற்கு பாவிக்கப் போகின்றீர்களா? என்பதை அனைவரும் சிந்திக்கவேண்டும்.,

வன்னியில் சிங்கள உறுப்பினர் ஒருவரைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மஸ்தான் அதற்காக வாக்குகளை எடுத்து கொடுக்கப்போகின்றார். அதற்கு நாம் துணை போகக்கூடாது. சிங்களவர் ஒருவர் இங்கு வெற்றிபெற்றால் அவரை நிச்சயம் அமைச்சராக ஆக்குவார்கள். இங்கே சிங்களக்குடியேற்றங்கள் அதிகரிக்கப்படும், எம்மை முற்றுமுழுதாக நசுக்கும் அபாயம் ஏற்படும். எனவே தனிப்பட்டவர்கள் மீது கொண்டிருக்கும் வெறுப்பை கூட்டமைப்பின்மீது காட்டமுற்படாமல். எமது இறையாண்மையையும் பலத்தையும் காட்டுகின்ற வாய்ப்பாக இந்தத் தேர்தலை பயன்படுத்தவேண்டும் - என்றார்.

(ம-110)

# பெண்களிடம் நகை அறுப்பில் ஈடுபட்ட சந்தேகநபருக்கு மக்களால் கவனிப்பு

## சுன்னாகத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜுலை 26

வீதியில் செல்லும் பல பெண்களிடம் நீண்ட நாள்களாக நகை அறுப்புக் கொள்ளையில் ஈடுபட்டு வந்ததாகச் சொல்லப்படும் நபரொருவர் நேற்றுப் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார். அவரிடம் இருந்து நான் கரைப் பவுண் நிறையுடைய 4 தங்கச் சங்கிலிகள் மீட்கப்பட்டன.

சந்தேகநபருக்கு 23 வயது. அவர் ஏழாலை மேற்கில் வசிக்கின்றார். பல பெண்களிடம் தங்க நகைகளை அறுத்த குற்றங்களுடன் அவருக்குத் தொடர்பு உள்ளது. சந்தேக நபருக்கு எதிராக 5 பொலிஸ் முறைப்பாடுகள் உள்ளன - என்று சுன்னாகம் பொலிஸார் முதல்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்தனர்.

(ம-26)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



**எமது சப்த தீவக வாக்காளப் பெருமக்களே!**
**உங்களிடம் நான் உரிமையுடன் கேட்பது**
**உங்கள் வாக்குகளை சப்த தீவகங்களின் அபிவித்திக்கு வாக்களியுங்கள்!**

**எமது சப்த தீவகத்தில் எமது மூதாதையர்களும் நாங்களும் வாழ்ந்த பிரதேசமும் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேசமும் என்பதை நாங்கள் சிந்தித்து 2020 தேர்தலில் வாக்களிக்க வேண்டும்..**

**கடந்த 40 ஆண்டுகளாக எமது சப்த தீவுகளில் எந்த விதமான அபிவிருத்தியற்ற சூனியப் பிரதேசமாக காணப்படுவதற்கு காரணம் சரியான நாடாளுமன்ற பிரதிநிதிகள் இல்லாததால்.**

1. எங்களது சப்த தீவக விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டங்களும் கடல் நீரை நன்னீராக்கி விவசாயத்துக்குப் பயன்படுத்தும் திட்டங்களும் மற்றும் பல விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விரிவான விளக்கங்களை நான் ஒரு சிறிய புத்தக வடிவில் உங்களுக்கு சமர்ப்பித்திருக்கின்றேன்.

2. அதனை பாரிய குழாய்கள் மூலம் விநியோகிக்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்படும்

3. தொழில்முயற்சிகளுக்கு தேவையான கடன் வசதிகளைக் குறைந்த 4 வீத வட்டியில் வழங்க ஆவன செய்தல்.

4. பனையில் இருந்து பெறப்படும் கள்ளை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையும் அடுத்ததாக சாராய உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலையும் . அமைக்கப்படும்.

5. பனையில் இருந்து பெறப்படும் பதநீரில் பனாங்கட்டித் தொழிற்சாலைகள் சீனித் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

6. பனையில் இருந்து பெறப்படும் பனங்கிழங்கில் இருந்து உணவுகள் உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகள் நிறுவப்படும்.

7. மீன்பிடித் துறைமுகங்களை புனரமைத்தலும். புதிய துறைமுகங்களை நிர்மாணிப்பதும்.

8. கடலுணவுகளை பதனிடலுக்கும் பொதியிடலுக்குமான தொழிற்சாலை அமைத்தல்.

9. கிராமங்களில் உள்ள சகல பாடசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்

10. கிராமங்கள் தோறும் இருக்கும் சனசமூக நிலையங்கள். வழிபாட்டுத் தலங்கள். விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றை புனரமைத்து மேம்படுத்துதல்.

கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!

**[illegible]கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் சப்த தீவுகளின் பாரிய அபிவிருத்திக்கு வித்திடுங்கள்.**

**“ உங்கள் வாக்கு உங்கள் உரிமை**
**சரியான முறையில் வாக்களியுங்கள்! ”**

தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.

# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்
# (விண்ணன்)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

**உண்மைகள் யாவும் அம்பலத்திற்கு....**

மருத்துவமனையில் இருந்து தப்பித்த

# கொரோனா நோயாளி தந்த தகவல்கள் போலியானவை

## பொலிஸ் பேச்சாளர் விளக்கம்

**கொழும்பு, ஜூலை 26**
**ஐ.டி.எச் மருத்துவமனையில் இருந்து நேற்றுமுன்தினம் தப்பிச் சென்ற கொரோனா நோயாளி, தனது பயணப்பாதை தொடர்பாக வழங்கிய தகவல்கள் போலியானவை எனத் தெரியவந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது:
குறித்த கொரோனா நோயாளி, அதிகாலை ஐ.டி.எச் வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றார். அதிகாலை 2 மணியளவில் தனது படுக்கையில் தலையணையை வைத்து, போர்வையால் மூடி, ஒருவர் படுத்திருப்பதைப் போல தோற்றத்தை ஏற்படுத்தினார். பின்னர் ஜன்னல் வழியாக இறங்கி, குழாய் வழியாக இறங்கி, மதிலேறிக் குதித்துத் தப்பித்துச்சென்றுள்ளார். அவர் முன்னர் வழங்கிய வாக்குமூலத்தில், உருகொடவத்தை வழியாக நடந்து கிராண்ட்பாஸ் சென்றதாக தெரிவித்திருந்தார். எனினும், அவரை ஏற்றிச்சென்ற முச்சக்கர வண்டி சாரதி அளித்த வாக்குமூலம் வித்தியாசமாக இருந்தது. இதையடுத்து, பொலிஸார், சுகாதாரத்துறையினர், புலனாய்வாளர்கள் அவரது பாதை தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தியதில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன. வைத்தியசாலையிலிருந்து தப்பித்த அவர், வழியில் வீடொன்றிற்குள் நுழைந்து உடைகளையும், சைக்கிளையும் திருடியுள்ளார். தனது உடையை மாற்றிவிட்டு, சைக்கிளிலேயே கோட்டைவரை சென்றுள்ளார். அந்த நபர் உடைகளையும், சைக்கிளையும் திருடிய வீடு கிருமி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நோயாளியின் பொறுப்பற்ற நடவடிக்கைகளுக்கு தனிமைப்படுத்தப்பட்ட சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.
(ம)

வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெற


# போலிப் பத்திரிகைகளை அச்சிட்டவர் கைதானார்!

கொழும்பு, ஜூலை 26
பிரபலமான தமிழ் பத்திரிகைகளைப் போன்று போலிப் பத்திரிகைகளை அச்சிட்டு அதனூடாக ஜேர்மன் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த நபரொருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.
மிரிஹான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிரபலமான தமிழ் பத்திரிகைகளைப்போன்று மூன்று பத்திரிகைகளை அச்சிட்டு வெளிநாட்டுக்கு வழங்கி வந்த நபரொருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் இவ்வாறு மூன்று பத்திரிகைகளை அச்சிட்டுள்ளதுடன் அதில் போலிச் செய்திகளை உள்ளடக்கியுள்ளமை விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. இந்த போலிப் பத்திரிகையின் ஊடாகதான் அரசியல் பழிவாங்களுக்கு உள்ளாகியிருப்பதாக காண்பித்து வெளிநாட்டுக்குச் செல்ல முற்பட்டுள்ள துடன், அதனூடாக குறித்த நாடுகளில் குடியுரிமை யையும் நுழைவிசைவையும் பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளார்.
அதற்கமைய சந்தேகநபர் முதலில் ருமேனியா நாட்டுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து ஜேர்மன் செல்வதற்கு எண்ணியுள்ளதுடன், இதற்காக வெளிநாட்டு பயண முகவர் நிலையமொன்றுக்கு கட்டணமும் செலுத்தியுள்ளார். தமிழ் பத்திரிகை ஒன்றில் பக்கவடிவமைப்பு பிரிவில் பணிபுரிந்துள்ள குறித்த சந்தேகநபர், பல போலி ஆவணங்களைத் தயாரித்து வழங்கியுள்ளமை விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன - என்றார்.
(ம)

# கட்டயமாக இஸ்லாத்துக்கு மாற்றப்பட்டார் சாரா!

## அவரது தாயார் சாட்சியம்

கொழும்பு, ஜூலை 26
உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரிகளில் ஒருவராகக் கருதப்படும் புலஸ்தினி, வலுக்கட்டாயமாக இஸ்லாத்துக்கு மாற்றப்பட்டார் என்று அவரது தாயார் சாட்சியம் வழங்கியுள்ளார்.
புலஸ்தினியின் தாயார் ராசரத்தினம் கவிதா உயிர்த்த ஞாயிறு தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுச் சாட்சியமளித்தார். அந்த சாட்சியத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



அப்துல் ரசிக் தனது மகளை வலுக்கட்டாயமாக இஸ்லாத்திற்கு மாற்றி, கட்டுவபிட்டி தேவாலயத்தில் தற்கொலைக் குண்டுவெடிப்பை நடத்திய ஹஸ்தூன் என்ற நபரை திருமணம் செய்து வைத்தார் என்றும் அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.
(ம)




வடக்கு - கிழக்கை இழக்கப் போகிறோம்
பதறுகின்றார் மஹிந்த

சபையில்
## சரவணபவன்

தமிழர்கள் தனிநாடு கோரினால் வடக்கு கிழக்கில் இரத்த ஆறு ஓடும் என்கிறார் பௌத்த பிக்கு. பிரபாகரன் ஆயுதத்தால் கேட்டதைப் பேனாவால் எழுதிக் கொடுக்கமாட்டேன் என்று கூறுகின்றார் பிரதமர். சமஷ்டித் தீர்வைக் கேட்டு நாட்டைப் பிரிக்காதீர் என்கிறார் மைத்திரி. தமிழர் வழி வன்முறை என்றால் பதிலடியும் வன்முறைதான். அதற்கு கறுப்பு யூலையே சாட்சி என்று மார்தட்டிக் கொள்கிறார் புத்தியீவிகள் சங்கத்தலைவர் ஓமல்பே சோபிததேரர். இப்போது என்னடாவென்றால் நாங்கள் இட்ட பிச்சையில் வாழ்பவர்கள் தான் தமிழர்கள் என்று கூறி சந்தோஷப்பட்டுக் கொள்கிறார். மீண்டும் ஆட்சிக்கு வந்து விடலாம் என்ற நப்பாசையில் பிரதமர் மகிந்த ராஜபக் ஷ.
இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் வடக்கையும் கிழக்கையும் இழந்து விடுவோமா என்ற பீதியும் தென்பகுதி கடும்போக்காளர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. எத்தனை பேர் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராகப் பிரசாரம் செய்தாலும் வடக்கு கிழக்கு மக்கள் தாயக உணர்வு உள்ளவர்கள். தமிழர் தேசியம் எமது இரத்தத்துடன் கலந்தது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும் எம் மக்களையும் பிரிந்துவிட முடியாது.
நாம் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் எம்மைப் பேராதரவுடன் வரவேற்றிக்னறனர் நாளுக்கு நாள் கூட்டமைப்பின் செல்வாக்கு அதிகரித்துக்கொண்டே வருகின்றது. அண்மையில் கிடைத்த தகவல்களின் படி நமது வேட்பாளர்கள் நடாத்தும் கூட்டங்களுக்கும் மக்கள் சந்திப்புக்களுக்கும் ஒட்டுக்குழுக்களின் ஒற்றர்களும் வந்து சோடா குடித்துவிட்டு கைதட்டிவிட்டுச் செல்கின்றனராம்.
இவர்கள் கொடுக்கும் தகவல்கள் ஒட்டுக்குழு பிரதிநிதிகள் மூலம் தென்னிலங்கைக்கு போய்விடுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிகரித்து வரும் செல்வாக்கு கடும்போக்காளர்களின் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டது. இந்த அதிர்ச்சியும், பீதியும் ராஜபக் ஷ சகோதரர்களுக்கு உதறல் எடுத்துள்ளது. வடக்கும் கிழக்கும் கைவிட்டுப் போய்விடுமோ என்று அஞ்சுகின்றனர். இந்த பயத்தினால் தான் எதைச் செல்கின்றோம் எப்படி செய்கிறோம் என்று தெரியாமலே திட்டித் தீர்க்கின்றனர்.
ஒருவேளை இப்படியும் இருக்கலாமோ? இனவெறி பிடித்தாடும் ராஜபக்சக்களின் எச்சில் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கும், அமைச்சுப் பதவிகளுக்காக வாலாட்டும் ஓரிரு தமிழர்களைப் பார்த்துத்தான் பிச்சையெடுக்கும் தமிழர்கள் என்று சொன்னார்களோ தெரியவில்லை.

1 2 3 4 5 6 7 8 9 10

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## திருத்தப்பட்ட பக்கங்கள் வரலாறாக உருவாகா

நிறவெறிக்கு எதிராக உண்மையான மாற்றம் வர வேண்டுமெனில் எது வரலாறோ எது உண்மையோ அதைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். மாறாக வரலாற்றின் திருத்தப்பட்ட பக்கங்களைத் திணிப்பதால் பயனில்லை இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார.

அமெரிக்காவில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பொலிஸாரின் அடக்குமுறையால் ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவர் உயிரிழந்தார். அவருக்கான ஆதரவுக் குரல்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இந்த நிலையில் கறுப்பினத்தவருக்கு எதிரான நிறவெறி மற்றும் இனவெறி தொடர்பில் ஆற்றிய உரையிலேயே சங்கக்கார இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள பேரினவாதத்துக்கு எதிரான கருத்துக்களையும், அரசின் தவறான போக்குகளையும் இம்மியும் தயக்கம் இல்லாமல் நேருக்குநேராகக் கண்டிக்கும் வெகுசில பிரபலங்களில் சங்காவும் ஒருவர். தற்போது அவர் வெளியிட்டுள்ள இந்தக் கருத்தானது நிறவெறிப் போக்குக்குப் பொருந்துகின்றதோ இல்லையோ இலங்கையில் நிலவுகின்ற இனவெறிப் போக்குக்கு நிச்சயம் பொருந்தக்கூடியது.

ஒரு கிரிக்கெட் வீரர் சர்வதேச அரங்கில் இவ்வாறான கருத்தை முன்வைத்துள்ள அதேநேரம், ஜனாபதி கோத்தாபய ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய மகா சங்கத்தினர் வடக்கு – கிழக்கில் உள்ள தொல்பொருள் வழ்க்குகளைக் கொழும்புக்கு மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். கிழக்கில் தொல்பொருள்களைப் பாதுகாப்பதற்கும் அதுசார்ந்த நடவடிக்கைகளுக்காகவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு அக் குழுவின் தேரர் ஒருவர் யாழ்ப்பாணம் நல்லூர்கூட சிங்கள வர்களுடையது என்று தெரிவித்திருந்த நிலையில், வடக்கு – கிழக்கில் உள்ள தொல்பொருள் வழக்குகளை கொழும்புக்கு மாற்றவேண்டும் என்று மகா சங்கத்தினர் விடுத்துள்ள கோரிக்கையானது, தமிழர்களிடத்தில் எஞ்சியுள்ள தொல்பொருள் சின்னங்களுக்கு சிங்களச் சாயம் பூசி, தமிழர்களின் வரலாற்றை வலிந்து அழிக்கும் நடவடிக்கைக்கான ஆரம்பப் புள்ளியா? என்ற சந்தேகம் தமிழர்களின் மனங்களில் இயல்பாகவே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

உலக அளவில் கறுப்பினத்தவர்களுக்கு ஆதரவாகத் தோன்றியுள்ள போராட்டங்களும் இலங்கையில் இனவெறிக்கு எதிராக வெளிப்படுத்தப்பட்டுவரும் எதிர்ப்புக் குரல்களும் கல்வி என்பது குழந்தைகளுக்கு உண்மையான வரலாற்றைச் சொல்லிக் கொடுப்பதாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றன. எது உண்மையோ, எதற்கு ஆதாரம் உள்ளதோ அதுவே கல்வியின்வழி போதிக்கப்படல் வேண்டும். மாறாக ஆதாரமற்ற கருதுகோள்களை அல்லது திருத்தி எழுதப்பட்ட வரலாற்றைப் போதிக்கக் கூடாது.

உண்மையான வரலாறு என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டால், இலங்கையர்களின் அணுகுமுறையில் அதிலும் குறிப்பாக பேரினவாதிகளின் அணுகுமுறையில் மாற்றம்வரும். அனைத்து நாகரீகங்களுக்கும் மூலமும், அனைத்து நாகரீகங்களின் அடிப்படையும் நாம்தான் என்று கருதுவதை விடுத்து உண்மைக்கு முன் அனைவரும் விழித்துக் கொள்ளவேண்டும். இது ஒரு இரவில் வந்துவிடும் மாற்றமோ அல்லது தேர்தல் கால சப்பைக்கட்டுப் பரப்புரையோ அல்ல. நீண்ட நெடிய முயற்சியின் பயனாகவே இந்த இமாலய மாற்றம் உருவாகுவதற்கு சாத்தியம் உள்ளது. ஓட்டைப் படகையும் ஒடிந்த துடுப்பையும் வைத்துக் கரைசேரும் முயற்சிக்கு நிகரான எண்ணம் இது.

# தேர்தல் முறைமை செயற்றிறனற்றது

## வலுவான கட்டமைப்புக்கள் அவசியம் என்கிறார் சபாநாயகர்



**கொழும்பு, ஜூலை 26**

**தற்போது நடைமுறையிலிருக்கும் முன்னுரிமை அடிப்படையிலான தேர்தல் முறை முற்றிலும் செயற்திறன் அற்றதாகும் என்று சுட்டிக்காட்டியிருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, அதனை மாற்றியமைப்பதற்கு நீண்டகாலமாக முயற்சித்து வருவதாகவும் எனினும், அதற்கு வலுவான கட்டமைப்புக்கள் அவசியம் என்றும் வலியுறுத்தி இருக்கிறார்.**

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கட்சிகளுக்கு இடையிலான மற்றும் கட்சிகளுக்குள்ளான மோதல்கள் அதிகரிக்கும்போது தேர்தல் வன்முறைகளின் அளவும் வெகுவாக அதிகரிக்கின்றது. தற்போது நடைமுறையிலிருப்பது போன்ற முன்னுரிமை அடிப்படையிலான தேர்தல்முறை முற்றிலும் செயற்றிறனற்றதாகும். இந்த முறையைத் திருத்தி அமைப்பதற்கு நான் சுமார் இரு தசாப்தகாலமாக முயற்சித்து வருகின்றேன். அதற்கு மேலும் பொறுப்புவாய்ந்த கட்டமைப்பொன்று அவசியமாகும்.

அதேவேளை, இந்தமுறை தபால்மூல வாக்கெடுப்பில் குறைந்தளவான வாக்குகளே பதிவாகியுள்ளமையானது ஸ்திரமான அரசியலில் மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதையே வெளிப்படுத்துகின்றது.

அதுமாத்திரமன்றி தற்போது நடைபெற்று வரும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் உரிய சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.

மற்றொரு பதிவில் அவர் பின்வருமாறு சுட்டிக்காட்டியிருக்கிறார். எவரொருவரும் சட்டத்தை மீறிச் செயற்பட முடியாதவாறான நாடொன்றையே மக்கள் விரும்புகின்றார்கள்.

எனினும், அண்மைக்காலத்தில் தொல்பொருள்கள் சார்ந்து இடம்பெற்ற சில சம்பவங்கள் சட்டத்தை மீறி அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர் என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தநிலை தொடருமாக இருந்தால் மக்கள் சட்டங்களின்மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கையை முழுவதுமாக இழந்துவிடுவார்கள். எனவே மக்களிடம் எழுந்திருக்கின்ற சந்தேகத்தை நீக்கி அவர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். (த)

## வர்த்தக பாதிப்பிலிருந்து மீள பிரிட்டன் – இலங்கை உடன்பாடு

கொழும்பு, ஜூலை 26

கொரோனா வைரஸ் பரவலால் வர்த்தகத்துறைக்கு ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீட்சிபெற ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கும் அதேவேளை, லண்டனுக்கு புதிய ஏற்றுமதிகளை அனுப்புவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வணிகம், முதலீடு மற்றும் மேலும் பல துறைகளில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவாக்குவது குறித்து வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கும் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சர் ரணில் ஜயவர்தனவுக்கும் இடையில் நடைபெற்ற தொலைபேசி மூலமான கலந்துரையாடலிலேயே இந்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டிருக்கின்றன. இரு அமைச்சர்களுக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது உத்தியோகபூர்வமான கலந்துரையாடல் இதுவாகும்.

இதன்போது வர்த்தகம், பாதுகாப்பு, ஆய்வு மற்றும் பயிற்சி வழங்கல், விஞ்ஞான தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாகவிரிவடைந்து வந்திருக்கும் ஒத்துழைப்பு குறித்து இருநாடுகளின் அமைச்சர்களும் மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

அதுமாத்திரமன்றி கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இருநாடுகளினதும் வர்த்தக நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிப்படைந்திருக்கும் நிலையில், அவற்றை மீட்டெடுக்கும் நோக்கில் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அத்தோடு நாடுகளுக்கிடையிலான பயணங்கள் மற்றும் சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல் மற்றும் நிரம்பல் சங்கிலியை வலுப்படுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்தும் தினேஷ்குணவர்தன மற்றும் ரணில் ஜயவர்தன ஆகியோர் ஒருமித்து வலியுறுத்தினர்.

இலங்கையிலிருந்து ஐக்கிய இராச்சிய சந்தைக்குப் புதிய ஏற்றுமதிகளை அறிமுகப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (த)

## சுற்றிவளைப்புகளை விரிவுபடுத்தத் திட்டம்

கொழும்பு, ஜூலை 26

தேர்தல் சட்டங்களை மீறும் நடவடிக்கைகள் தொடர்பான சுற்றிவளைப்புகளை மேலும் விரிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ள பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜேசூரிய தெரிவித்தார்.

இதனிடையே தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 6 வேட்பாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று 02 வேட்பாளர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜேசூரிய தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 257 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் நேற்றுமுன்தினம் மாத்திரம் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

# முருகேசு சண்முகம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 . 04 . 1926 | 15 . 08 . 2010 |

திதி : பூர்வபக்க ஷஷ்டி

ஐயிரண்டு பத்து ஆண்டுகள் ஆனதே - ஐயா
மெய்விடுத்து மீண்டு சென்றீர்கள் முன்பு - எங்கள்
கைபிடித்து நீங்கள் காட்டிய பாதை - இன்று
வையத்துள் நல் ஒளிதந்து வழிகாட்டுது ஐயா

57, மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 . 07 . 1963 | 24 . 07 . 2020 |

### திருமதி. குணபால் ஜெயராணி (நந்தினி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணபால் ஜெயராணி அவர்கள் நேற்று முன்தினம் (24.07.2020) வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சுபத்திரை அவர்களின் அன்பு மருமகளும் குணபால்(குணம்) அவர்களின் பாசமிகு மனைவியும் சகானா(ஜேர்மனி). அபர்ணா(அலுவலக உதவியாளர். கொக்குவில்-தொழிநுட்பக் கல்லூரி). சுபர்ணா (கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீவித்தியாகரன் (ஜெசி-ஜேர்மனி) அவர்களின் பாசமிகு மாமியாரும் ஜெயராசா (வசந்தன்) அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அசாத் வீதி, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.
0775711692

## மரண அறிவித்தல்



### செல்வி பரமேஸ்வரி இராமலிங்கம்

வண்ணார்பண்ணை இல.54, பிரப்பங்குளம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி. பரமேஸ்வரி இராமலிங்கம் நேற்று (25.07.2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - சீதாலெட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இராமனாதர், பாலசுப்பிரமணியம், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மருமக்கள்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## கண்ணீர் அஞ்சலி

நாதஸ்வர வித்துவான்

### மாரிமுத்து நாராயணசாமி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 24 |
| 02 | 07 |
| 1947 | 2020 |

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இலங்கை இசை வேளாளர் இளைஞர் பேரவை

## கண்ணீர் அஞ்சலி

Micom International (கொழும்பு, தெல்லிப்பளை, மயிலிட்டி)

திருமதி
### செல்வகுமாரி (நந்தா) ஸ்ரீவத்ஸன் (ரமணன்)



மேற்படி கல்வி நிலையத்தில் கணினி விரிவுரையாளராக 1998 -2002 வரை செயலாற்றிய என் அன்பு தங்கச்சியின் மரணம் சம்பந்தமாக எனது ஆழ்ந்த கவலைகளைத் தெரிவித்து. சகல Micom விரிவுரையாளருக்கும் ,ஊழியர்களுக்கும் தெரிவித்து கொள்வதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

யோகானந்தம்
(சட்ட விரிவுரையாளர்)

## மரண அறிவித்தல்



### பூதப்பிள்ளை சின்னாச்சி

பன்னாலையை பிறப்பிடமாகவும், கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை - சின்னாச்சி நேற்று (25.07.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், பெரியாள் - தெய்வி தம்பதிகளின் அன்பு மருமகளும், பெரியான் பூதப்பிள்ளை என்பவரின் மனைவியும் மோகனதாஸ். லீலா. சகுந்தலா. விமலராணி. சரஸ்வதி. ஜெயகௌரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் குணரத்தினம். சின்னமணி. குணராசா. ஜெயரட்ணம். நிர்மலா ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரகாஸ். பிரதீஸ். பிரபாலினி. பிரதீபா. தர்சன். சுரேஸ். சுஜீபன். சுபாசினி. சுகிர்தன். சுகன்யா. துஜீபன். துவாரகன். விதுசன். மதுசன். யானுஷா. வேணுஷன். கவியழகன் (லண்டன்). கோனிலவன் (லண்டன்). ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிஷான். கஸ்மிதா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.07.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொப்பிளாவாளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:- 076 289 5907 தகவல்:- குடும்பத்தினர்

## சிறார்களின் கற்றல் செயற்பாடு தொடர்பான செயலமர்வு

சாவகச்சேரி, ஜூலை 26

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோரிடையே இணைப்பினை ஏற்படுத்தி சிறார்கள் வீட்டில் இருந்தவாறே கற்றலை மேற்கொள்வது தொடர்பான செயலமர்வு நேற்று வலயக் கல்வி அலுவலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. கொரோனாத் தொற்றுக் காரணமாக முன்பள்ளி கள் இன்னமும் திறக்கப்படாத நிலையில் சிறார்க ளின், கல்வி நிலைமையைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

செயலமர்வில் முன்ப ள்ளிகளின் 35 ஆசிரியைகள் கலந்து கொண்டனர். வீட்டை அடிப்படையாகக் கொண்டு கற்றல் செயற்பாடுகளை திட்ட மிடல் என்னும் தலைப்பில் மாகாண கல்வித் திணைக்கள முன்பள்ளி பணிப்பாளர் ஜெயா தம்பையா கருத்துரைகளும் வழங்கினார். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதிச.அரியநாயகம் செயலமர்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். ஆசிரியைகள் தமது முன்பள்ளிகளின் பெற்றோர்களை வாரத்தில் ஒருநாள் அழைத்து பிள்ளைகள், மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடவேண்டும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## ஈழவர் ஜனநாயக முன்னணியின் விஞ்ஞாபனம் இன்று வெளியீடு!

ஈழவர் ஜனநாயக முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவுள்ளது. கடந்த 70 வருடங்களாக பலராலும் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்க ளால் எந்தப் பயனும் இல்லை. மக்களின் விமோ சனத்துக்கு ஏற்பதமது விஞ்ஞாபனம் அமையும் என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது. (ம)

## நல்லைக்குமரன் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 26
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெற வுள்ளது.


சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் பணியாற்றியதுடன் நில்லாது பல சமூகப் பணிகளையும் மேற்கொள்பவர்களுக்கு வருடாந்தம் 'யாழ். விருது' வழங்கப்பட்டு வருகிறது.

இம்முறை நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவின் போது பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வுநிலை அதிபரும் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவருமான கவிஞர் சோ.பத்மநாதனுக்கு இந்த விருது வழங்கப்பட வுள்ளது என்று யாழ்.மாநகர சபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுத் தலைவருமாக இ.த. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (ஐ)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனாத் தொற்றுக் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாட்டில் ஈடு பட்டமையை அவதானிக்க முடிந்தது. நல்லூர்க் கந்தன் திருவிழா தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 3 ஆம் திகதி திருமஞ்சத் திருவிழா வும், 12 ஆம் திகதி காலை சூர்யோற்சவம் திருவிழாவும் மாலை கார்த்திகை உற்சவமும், 13 ஆம் திகதி சந்தானகோபாலர் உற்சவமும், 13 திகதி மாலை கைலாசவாகனமும், 14 திகதி மாலை வேல் விமா னமும், 15ஆம் திகதி தெண்டாயுதபாணி உற்சவமும், 15 திகதி மாலை ஒருமுகத்திரு விழாவும், 16ஆம் திகதி சம்பரமும், 17ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 18 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழா வும் மாலை கொடியிறக்கமும் நடைபெறும். (ஐ)









# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நல்லூரான் கொடியேறியது

யாழ்ப்பாணம், ஜூலை 26
சுகாதார நடைமுறைகளுடன், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நல்லூர்க் கந்தன் கொடியேற்றத் திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

கொரோனா நிலைமை காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்துக்கு வருகைதந்த அடியவர்கள் அனைவரும் கைகளைக் கழுவி, முகக் கவசம் அணிந்து அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்தை பொலிஸாருக்கு காண்பித்து, அவர்களது முகம் சி.சி ரி.வி கமராவில் பதிவுசெய்யப்பட்ட பின்னரே ஆலயத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் வெளிநாட்டிலிருந்தவர்கள் வருபவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமைக்கான சான்றிதழைக் காண்பித்த பின்னரே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைக் கொண்டு வராதவர்கள் ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்தின் உட்புறத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அடியார்கள் அனுமதிக்கப்பட்டதோடு ஆலயத்தின் உட்புறத்திலும் சமூக இடைவெளியைப் பின்பற்றக்கூடியவாறு ஆலய நிர்வாகத்தி னரால் மக்கள் வழிபட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதேபோல் ஆலயத்துக்கு வெளியிலும் பொலிஸாரினால் சமூக இடைவெளியைப் பின்பற்றி ஆலயத் திருவிழாவைத் தரிசிக்க அனுமதி வழங்கப்பட்டது. எனினும் வழமைக்கு மாறாக இம்முறை பலத்த கட்டுப்பாடுகளுடன் ஆலய உற்சவத்திற்கு பெருமளவில் மக்கள் கலந்து கொண்டிருந்தனர். பாதுகாப்பு கடமையில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர், ஆலயத்துக்கு வரும் அடியவர்களை சோதனைச் சாவடிகளில் சோதனையிடும் நடவடிக்கையை பொலிஸார் மற்றும் மாநகரசபை ஊழியர்கள் மேற்கொண்டனர். (ஐ-20)



## நல்லூரான் சிறப்பம்சம்

### நல்லூர் வாசன்

சீறும் சிறப்பும் பெயரும் புகழும்
வெற்றி வேலும் சேவற் கொடியும்
ஊரும் நாடும் உலகும் போற்றும்
நகராம் நல்லூரின் ஒப்பில்லா முருகன்

காலமும் ஒழுங்கும் குலையாத நேர்த்தியும்
அலங்காரமும் அபிடேகமும் பூசையும் இசையும்
மணியும் ஓசையும் மேளமும் நாதமும்
ஒன்றாய் அமைந்த சிங்கார வேந்தன்
என்றும் அருளும் எமக்குத் துணையும்
நன்றே செய்யும் பழனி வேலன்
அற்புதம் புரியும் அழகுப் பாலன்
கூடி மகிழ்ந்து கூப்பித் தொழுவோம்

சிவரம்யா

### வேர் அறாமல் எம்மைக் காத்திடய்யா

அஞ்சேல் அபயம் எனச் சொன்னவனே
நெஞ்சுக்குள் தொழுதுன்னை வணங்குகிறோம்
நஞ்செனச் சூழ் கிருமி துயர் போகவே
வெஞ்சினம் கொண்டெம் துயர் களைவாயே
யாருக்கு மாலையிடப் புரியவில்லை
ஊருக்குள் பலரையும் தெரியவில்லை
தேர்விழுந்து நிற்கிறது எங்கள் வாழ்வு
வேர் அறாமல் எம்மைக் காத்திடய்யா

புலோலியூர் வேல்நந்தன்

### கும்பிட ஒரு ரூபா போதுமே

ஏழையின் இதயத்தில்
இடம்பிடித்த ஆலயம்
எழில் நல்லையிலர் வரந்தரும்
அழகு முருக ஆலயம்
வாழையடி வாழையாக
மாப்பாணர் பரம்பரை
வாலாயமாக வடிவமைத்த
வேல் கொண்ட ஆலயம்
கிழை மேலை தேசத்தவர் நல்லைக்
கொடி பார்க்க வருவர் ஓடி
கோடி பணம் இருந்தாலும்
கும்பிட ஒரு ரூபா போதுமே



கே.எஸ்.சிவஞானராஜா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
JAFFNA ELECTRICALS
யாழ்ப்பாண மின்னகம்
Dealers in Quality Electricals & Electronics items
Tel: 021 222 2353 Fax: 021 222 4302
Email: jaffnaelectricsld@yahoo.com
web: www.jaffnaelectricals.com
94 (6), Stanley Road, Jaffna.

# சம்பந்தனின் மிரட்டலுக்கு சிங்களவர்கள் அஞ்சார்கள்

## விமல் வீரவன்ச ஆவேசம்



**கொழும்பு, ஜூலை 26**

**'தமிழர்களைப்போல் சிங்களவர்களையும் முட்டாளாக்கலாம் என்று சம்பந்தன் நினைக்கின்றார். அவரின் வாய்ச்சவடால் சிங்களவர்கள் மத்தியில் எடுபடவேமாட்டாது. அவரின் மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சவேமாட்டோம். அவரின் எச்சரிக்கைகள் அரசுக்குத் தூசி போன்றன' இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

'சமஷ்டியைக் கேட்கும் உரித்து எமக்கு உண்டு. தமிழ் மக்கள் அநாதைகளாக்கப்படவில்லை. அவர்களின் பின்னால் சர்வதேசம் நிற்கின்றது' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்துஅவர் மேலும் தெரிவித்ததாவது:

'தமிழர்களை முட்டாள்களாக்கும் சம்பந்தன், சிங்களவர்களையும் முட்டாள்களாக்கலாம் என்று நினைக்கின்றார். சம்பந்தனின் வாய்ச்சவடால் தமிழர்கள் மத்தியில் தான் எடுபடும். அது சிங்களவர்கள் மத்தியில் எடுபடவேமாட்டாது. அரசியல் தீர்வு கிடைக்க ஆணை தாருங்கள் என்று கூறி தமிழ் மக்களை அன்று தொடக்கம் ஏமாற்றி வாக்குகள் சேகரித்துவரும் சம்பந்தன் தரப்பினர், இன்று சர்வதேசம் தமது பக்கம் என்று கூறி சிங்களவர்களை மிரட்டப் பார்க்கின்றார். இந்த மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சவேமாட்டோம். சம்பந்தனின் எச்சரிக்கைகள் அரசுக்குத் தூசி. தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கச் சொல்லி எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவே முடியாது. புதிய ஆட்சியில் அரசு வழங்கும் பொதுவான தீர்வு நாட்டிலுள்ள சகலருக்கும் உரியதாகவே இருக்கும்' - என்றார். (அ,22)

# புதிய ஆட்சியிலேயே அமைச்சரவைக் கூட்டம்

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் அடுத்த வாரத்துக்கான அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாது எனத் தெரியவருகின்றது.

பொதுத்தேர்தலுக்கு இன்னும் 10 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் இறுதிக்கட்ட பரப்புரைகளில் அமைச்சர்கள் பங்கேற்க வேண்டியுள்ளதாலேயே அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறாது என அறிய முடிகின்றது.

கடந்தவாரம் நடைபெற்ற கூட்டமே இந்த ஆட்சியின் கீழ் நடைபெற்ற கடைசி அமைச்சரவைக் கூட்டம் என்றும், 5ஆம் திகதி தேர்தல் நடைபெறுவதால் அன்றையதினமும்அமைச்சரவை கூடாது எனவும் தெரியவருகின்றது.

எனவே, பொதுத்தேர்தலில் வெற்றிபெறும் கட்சி புதிய அரசாங்கமொன்றை நிறுவி, அமைச்சரவையை நியமித்த பின்னரே இனி அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-44)

# பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 26

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் சிகிச்சை பெற்றுவரும் மருத்துவமனைகளுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்றுவந்த நோயாளர் ஒருவர் நேற்று அதிகாலை தப்பிச்சென்ற நிலையில் குறித்த நபர் பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தார். இதனையடுத்து, வைத்தியசாலைகளில் இருந்து நோயாளர்கள் தன்னிச்சையாக வெளியேறும் சம்பவங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ம-அ)

# கைதிகளையும் வாக்களிக்க அனுமதிக்குக!

மட்டக்களப்பு, ஜூலை 26



சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விசாரணைக் கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மறை மாவட்ட பேராயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தேர்தல் ஆணைக்குழுத் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

'ஜனநாயக நாடொன்றில் பிரஜைகளுக்கு வாக்களிக்கும் உரிமையை மறுப்பது நியாயமில்லை. சிறையில் சாதாரணமாக தடுத்துவைக்கப்பட்டவர்கள் குற்றவாளிகளல்லர். அவர்கள் நீதிமன்ற விசாரணைகளுக்காகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

சிறையில் இருப்பவர்கள் எல்லோரையும் நாம் தண்டனை பெற்றவர்களாகவோ, குற்றவாளிகளாகவோ கருதமுடியாது. அதனை நீதிமன்றமே தீர்மானிக்க முடியும். நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரை அவர்கள் சாதாரண தடுப்புக் கைதிகள் தான். அவர்களைக் குற்றவாளிகள் என்று அடையாளப்படுத்த முடியாது. ஆதலால், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படலாகாது.

சிறையிலிருக்கும் விசாரணைக் கைதியொருவரும் எதிர்வரும் நாடாளுமன்றக் தேர்தலில் வேட்பாளராக நிற்கிறார். அதே நேரத்தில், அதே சிறையில் அவரோடு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விசாரணைக் கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இதனை தேர்தல் ஆணையாளர் கவனத்தில் எடுக்க வேண்டும்' என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# குட்டிமணி, தங்கத்துரைக்கு வவுனியாவில் அஞ்சலி

வவுனியா, ஜூலை 26

83ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையின் போது வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முக்கியஸ்தர்களான தங்கத்துரை மற்றும் குட்டிமணி, ஜெகன் ஆகியோரின் நினைவு தினம் நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழவிடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட காரியாலயத்தில் கட்சியின் முக்கியஸ்தர் விஜயகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோரது உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் கட்சியின் உபதலைவர் ஹென்றி மகேந்திரன், துணை மாவட்ட அமைப்பாளர் நாகராயன், பிரதேசசபை உறுப்பினர்களான பூ.சந்திரபத்மன்,கார்த்தி மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ,110)






சன் மெட்ச் தனியார் நிறுவனம்
பமுணுபொலவத்த, குண்டசாலை, கண்டி, இலங்கை.
தொ.பே.: +94 81 4472555, +94 81 2420057, +94 81 2420225
பெக்ஸ்: +94 81 2420435 ஈமெயில்: soorya@slt.lk



# உர மானிய பதிவு இன்று

கைதடி, ஜூலை 26

கைதடி நுணாவில் விவசாய சம்மேளனத்தின் உரமானியப் பதிவு இன்று காலை 7 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை சம்மேளனத் தலைவர் சி. லோகதாஸ் இல்லத்தில் இடம்பெறவுள்ளது என்று சம்மேளனம் அறிவித்துள்ளது.

பதிவுக்காக வருபவர்கள் ஏக்கர் வரிப் பற்றுச்சீட்டையும் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலதிக விவரங்களுக்கு 0766560812 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# ஹபாயா, புர்கா அணிந்து ஆண்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 26

குவாஸி நீதிமன்ற முறைமையைக் கலைத்து விடுமாறும், புர்கா அணியும் பிரச்சினைக்கு தீர்வைக் காணுமாறும் கோரி, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

நாட்டுக்கு விசுவாசமுள்ள குடிமக்கள் எனும் அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆண்கள் முஸ்லிம் பெண்கள் அணியும் ஹபாயா மற்றும் புர்கா ஆடைகளை அணிந்திருந்தனர்.

'ஒரே நாடு, ஒரே சட்டம்','சிறுவர் திருமணம் என்பது, சிறுவர் துஷ்பிரயோகம்' என்பவை உள்ளிட்ட சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர். (ரி1)



# ரிஷாத், ரவிக்கு விடுத்த உத்தரவுகளில் திருத்தம்




கொழும்பு; ஜூலை 26

முன்னாள் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், ரவி கருணாநாயக்க ஆகியோரை சி.ஐ.டியில் ஆஜராகுமாறு விடுக்கப்பட்ட உத்தரவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரிஷாத் பதியுதீன், ரவி கருணாநாயக்க ஆகியோர் சார்பில் கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் முன்வைக்கப்பட்ட விடயங்கள், அவற்றுக்கு சட்ட மா அதிபர் சார்பில் முன்வைக்கப்பட்ட பதிலுரை என்பவற்றை ஆராய்ந்தே இந்த திருத்திய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை எதிர்வரும் 27 ஆம் திகதி திங்களன்று சி.ஐ.டியின் விஷேட விசாரணைப் பிரிவு 3 ஆம் இலக்க விசாரணை அறையில் ஆஜராகுமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் கடந்தவாரம் உத்தரவிட்டிருந்தது. மன்னார் பகுதியில் தேர்தலில் போட்டியிலும் அவர், அங்கு கட்சியின் தலைவர் என்ற ரீதி யில் தேர்தல்கள் வேலையில் உள்ளதால், கொழும்புக்கு வந்து செல்ல சுமார் 16 மணி நேரங்கள் தேவைப்படும். எனவே தேர்தல் தொடர்பில் செயற்பட தடங்கல் ஏற்படுவதால் தேர்தலின் பின்னரான திகதி ஒன்றைத் ரிஷாத் பதியுதீன் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன கோரினார்.

இதுதொடர்பில் ஆராய்ந்த நீதிவான் ஏற்கனவே விடுத்த உத்தரவைத் திருத்தி சி.ஐ.டி. அதிகாரிகளுக்கு வவுனியா சி.ஐ.டி. அலுவலகத்துக்குச் சென்று ரிஷாத்திடம் வாக்கு மூலம் பெறவும், திங்களன்று வவுனியா சி.ஐ.டி. அலுவலகத்தில் விசாரணைகளுக்கு ஆஜராவது போதுமானது எனவும் உத்தரவிட்டார்.

மத்திய வங்கியின் முறிகள் மோசடி தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவை விசாரணைகளுக்காக எதிர்வரும் 27 ஆம் திகதி திங்களன்று சி.ஐ.டி.யில் ஆஜராக கோட்டை நீதிவான் நீதிமன்றம் விடுத்த உத்தரவும் திருத்தப்பட் டுள்ளது. 'ரவி கருணாநாயக்க ஐ.தே.க.வின் உப தலைவர் என்ற ரீதியில் பெரும் வேலைப்பளு உள்ளதால் தேர்தலின் பின்னரான திகதியை விசாரணைக்குத் தருமாறு ரவி கருணாநாயக்க சார்பில் கோரப்பட்டது. அதற்கு சட்டமா அதி பர் திணைக்களம் எதிர்ப்பு வெளி யிட்டது. இரு தரப்பு நியாயங்களை ஆராய்ந்த மன்று இரு தரப்புக்கும் பாதிப்பு இல்லாமல், ஏற்கனவே அறிவிக்கப்பட்டமைக்கு ·அமைய நாளை திங்களன்று நாலரை மணி நேரம் மட்டும் சி.ஐ.டியில் வாக்கு மூலம் வழங்க ரவி கருணாநாயக்கவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மட்டும் அவரிடம் வாக்கு மூலம் பதிவு செய்து கொள்ளப்படவுள்ளது. (ரி1)



# 11 இளைஞர்கள் காணாமலாக்கப்பட்ட வழக்கு; டிசெ.4 இல் விசாரணை


கொழும்பு, ஜூலை 26

கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட உட்பட 14 சந்தேகநபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மீண்டும் எதிர்வரும் டிசெம்பர் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு கொழும்பு விசேட மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சம்பா ஜானதி ராஜரத்ன, அமல் ரணராஜா, நவரத்ன மாரசிங்க ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த 11 இளைஞர்கள் கப்பம் பெறும் நோக்கில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் கடற்படையினருக்குத் தொடர்பு இருப்பது விசாரணைகளில் தெரியவந்ததை அடுத்தே சட்டமா அதிபர் அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதும், சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி ஜனக்க பண்டார, வழக்கு விசாரணைகளை இடைநிறுத்துமாறு கூறி மேன்முறையீட்டு நீதிமன்றம் தடையுத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளதாகவும், அதற்கு எதிராக சட்டமா அதிபர் அதே நீதிமன்றத்தில் எதிர்ப்பு மனுவை தாக்கல் செய்துள்ளார் எனவும் கூறியுள்ளார். (ரி2)



# மன்னாரில் மேட்டுநிலப்பயிர் அறுவடை ஆரம்பம்

மன்னார், ஜூலை 26

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிறுபோக பயிர்ச் செய்கையூடாக மேட்டுநிலப்பயிர்ச் செய்கைகளை ஊக்குவிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுதானியப் பயிர்களான பயறு, கௌப்பி, நிலக்கடலை போன்றவை அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. அறுவடைப் பணிகளில் அதிகளவான பெண்கள் ஈடுபட்டு சிறு வருமானங்களை ஈட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1-213)

# தேடப்பட்டு வந்த முன்னாள் காவலர் சரண்

கொழும்பு, ஜூலை 26

தேடப்பட்டு வந்த நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் சிறைக்காவலர் காலிங்க கலுஅக்கல குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் சரணடைந்துள்ளார்.

பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள காலிங்க உள்ளிட்ட மேலும் 3 பேரை கைதுசெய்யுமாறு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் கடந்த 22 ஆம் திகதி பிடியாணை பிறப்பித்திருந்தது. இதனையடுத்து தேடப்பட்டு வந்த நிலையிலேயே முன்னாள் சிறைக் காவலர் நேற்றுச் சரணடைந்துள்ளார்.

# விசாரணையில் சிக்கியது 45 கிலோ கஞ்சா

மன்னார், ஜூலை 26

கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மன்னாரில் 6 கிலோ கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவரிடம் நடத்திய மேலதிக விசாரணையில், மேலும் 45கிலோ 325 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 22ஆம் திகதி 6 கிலோ 90 கிராம் கேரளாக் கஞ்சா மீட்கப்பட்டிருந்தது.

மன்னார் மாவட்டத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டுல்ல வீரசிங்கவின் அறிவுரையின் பேரில் மன்னார் பொலிஸ் பொறுப்பதிகாரி கிருசாந்தனின் வழிகாட்டலின்படி மன்னார் மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவுக்கு பொறுப்பான உ.பொ.ப.குமார தலைமையிலான அணி கஞ்சாவை மீட்டிருந்தது.

சந்தேகநபர் மன்னார் சின்னக்கருசல் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர். அவரிடம் நடத்திய மேலதிக விசாரணை



மூலமாக மேலும் 45 கிலோ 325 கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அவற்றின் பெறுமதி சுமார் 45 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர் சான்றுப் பொருள்களுடன் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-213,56)



## பாடசாலைகளுக்கு அருகிலுள்ள வீதி விவரங்கள் கோரல்

கொடிகாமம், ஜூலை 26

பாடசாலைக்குச் செல்லும் மற்றும் பாடசாலைக்கு அருகில் உள்ள வீதிகளின் விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபையிடம் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் கோரியுள்ளது.

இது தொடர்பில் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெற்ற சபை அமர்வில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.


பாடசாலை மாணவர்களின் வீதிப் போக்குவரத்துக்கு ஏற்படும் இடையூறுகளைத் தீர்க்கும் பொருட்டு பாடசாலைகளுக்கு அருகில் உள்ள திருத்தம் செய்யப்பட வேண்டிய மற்றும் திருத்தி செப்பனிட வேண்டிய வீதிகளின் விவரங்களை கல்வி அமைச்சிற்கு வழங்குவதற்காக வீதி விவரங்களை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் கோரியுள்ளது. இக் கோரிக்கைக்கு அமைவாக ஒவ்வொரு பிரதேச சபை உறுப்பினர்களும் தமது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு முன்னால் மற்றும் அருகிலுள்ள திருத்தம் செய்யப்பட வேண்டிய வீதிகளின் பெயர்களைத் தெரிவுசெய்து வழங்குமாறு தவிசாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ரி1-159)





மிருசுவில் ஸ்ரீஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம் 10 தினங்களாக நடைபெற்று, கடந்த வியாழக்கிழமை தேர்த் திருவிழா இடம்பெற்றது. (ரி2-159)

# மன்னார் பேருந்து நிலையம் மக்கள் பாவனைக்காக கையளிப்பு



**மன்னார், ஜூலை 26**

**மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம் நேற்றுக் காலை மக்களின் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுமார் 130 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் பஸார் பகுதியில் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையம் நகர அபிவிருத்தி அதிகார சபையால் கடந்த ஜூன் மாதம் 7 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த பஸ் நிலையத்தில் அரச தனியார் பேருந்து சேவைகள் வைபவ ரீதியாக இடம்பெறும் வகையில் நேற்று காலை மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட்டினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் தனியார் பேருந்து சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டபோதும், அரச போக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலை பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-56)

## கருங்குளவிக்கூடு காணப்பட்டால் அறிவிக்கவும்

சாவகச்சேரி, ஜூலை 26

கருங்குளவிக்கூடுகள் மரங்களில் இருப்பதைக்காண்போர் உடனடியாக அருகில் உள்ள சுகாதாரத் திணைக்களத்துடன் அல்லது பிரிவு கிராம அலுவலர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போன்றோருடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்துவதன் மூலம் கூடுகளை அழித்து மக்களைப் பாதுகாக்க முடியுமென சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று காலை மீசாலை வடக்கில் மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள், அவ்வழியே வந்த சிறுமியைத் (வயது11) தாக்கியதால், தாக்குதலுக்கு இலக்கான சிறுமி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரி3-9)



## இடியுடன் கூடிய மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஜூலை 26

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்கள் மற்றும் வடமேல் மாகாணம் ஆகிய வற்றில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. அத்துடன் ஊவா, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும். மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை மற்றும் பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளும் புத்த ளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். (ரி3)

# மஞ்சளுக்கு பெரும் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் மஞ்சளுக்கு தட்டுப்பாடு நிலவிவருகின்றது. கடந்த காலங்களில் அதிக விலைக்கேனும் மஞ்சளைக் கொள்வனவு செய்வதற்கான இயலுமை இருந்த போதிலும், தற்போது சந்தைகளில் மஞ்சளுக்கு தட்டுப்பாடு காணப்படுதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.



மஞ்சள் இறக்குமதிக்கு தடை விதித்து அரசினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பின்னரே மஞ்சளுக் குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ரி2)

## கொள்கலன் பெட்டி கடத்தல்; கிராம சேவகரால் முறியடிப்பு!

புதுக்குடியிருப்பு இருட்டுமடுப் பகுதியில் போரின் போது கைவிடப்பட்ட கொள்கலன் பெட்டி ஒன்று இருட்டுமடுவைச் சேர்ந்த சிலரால் படையினரின் உதவியுடன் நேற்று முன்தினம் கடத்த முயற்சித்தவேளை, கிராம மக்களின் எதிர்ப்பையடுத்து, கிராமசேவகரின் தலையீட்டினால் முறி யடிக்கப்பட்டுள்ளது. தனியார் காணி ஒன்றில், போரின் போது கைவிடப்பட்ட மேற்படி கொள்கலன் பெட்டி பிரதேச செயலகத்தின் பதிவின் ஊடாக அரச சொத்தாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3-19)

சுதந்திரபுரம் மற்றும் உடையார்கட்டு வடக்கு கிராம அலுவலர்கள் "தமிழர் அடையாளம்காக்கும் நடவடிக்கை"யின் ஓர் அங்கமாக தமிழர் கலாசார உடையில் நேற்று தமது கடமைக்குச் சென்றிருந்தனர். வெளிக்கள பணிக்குச் சென்றுகொண்டிருந்த அவர்களை மறித்து வினவியபோது தாம் மட்டுமல்ல ஏனைய கிராம அலுவலர்களும் இவ்வாறு கலாசார உடையில் கடமைக்குச் செல்ல ஆர்வமாக இருக்கிறார்கள் எனவும் எதிர்வரும் நாள்களில் அனைத்து கிராம உத்தி யோகத்தர்களும் தமிழர் பாரம்பரிய உடைகளிலேயே செல் வார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ரி3-222)



# சமுர்த்தி பயனாளிகளுக்கு மறுமலர்ச்சிக் கடன்

கொழும்பு, ஜூலை 26
இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள கொவிட்19 மறுமலர்ச்சிக் கடன்களை, சமுர்த்திப் பயனாளிகளில் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற பயனாளிகளுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்19 தொற்றின் காரணமாக மோசமான தொழில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள சுயதொழிலில் ஈடுபட்டுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு சௌபாக்கியா கொவிட் 19 மறுமலர்ச்சிக் கடன்களை ஆண்டுக்கு 4 சதவீத வட்டியில் தொழில்படு மூலதனக்கடன்களாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் சமுர்த்தி திணைக்களத்தின் குறுநிதியப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே சமுர்த்தி வங்கியில் சுயதொழில் முயற்சிக்காக ரூபா 250,000/முதல் ரூபா 500,000/= வரை வாழ்வாதார அபிவிருத்திக் கடனைப் பெற்று செலுத்திக் கொண்டிருக்கும் சமுர்த்திப் பயனாளிகளில் கொவிட்19 தொற்றின் காரணமாக மோசமான தொழில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள பயனாளிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ள தொழில்படு மூலதனக் கடன்களை ஆண்டுக்கு 4 சதவீத வட்டியில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், இத் திட்டத்திற்காக கொவிட்19 தொற்றின் காரணமாக தொழில் பாதிப்புற்ற கடன் பெற்ற பயனாளிகளின் விபரங்களை கிராம அலுவலர் பிரிவுகளின் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் திரட்டிவருகின்றனர் எனவும் சமுர்த்திப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ரி3-39)



பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பை கிளிநொச்சி மாவட்டத்தில் உத்தியோகபூர்வமாக அண்மையில் பதிவுசெய்து உறுதிப்படுத்திய சான்றிதழை, உதவித் திட்டமிடல் பணிப்பாளரிடம் அமைப்பின் தலைவர், செயலாளர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இந்த அமைப்பானது 2018ம் ஆண்டிலிருந்து கிளிநொச்சி மாவட்ட இளைஞர், யுவதிகளின் பங்களிப்புடன் எந்தவித இலாப நோக்கமும் இன்றி சேவையைச் செய்துவருகின்ற முன்மாதிரியான இளைஞர் அமைப்பு எனக் கூறப்படுகிறது. (ரி3)

## பி.சி.ஆர். பரிசோதனைக்கு 36 மில்லியன் வழங்கியது கொவிட் 19 நிதியம்

கொழும்பு, ஜூலை 26
சுகாதார, சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு மேற்கொள்ளும் அத்தியாவசிய பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக சுகாதார, சமூக, பாதுகாப்பு நிதியத்தின் மூலம் 35,605,812.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான காசோலை நேற்று மத்திய வங்கி ஆளுநரும் கொவிட் 19 சுகாதார சமூக பாது காப்பு நிதியத்தின் முகாமைத்துவ சபை தலை வருமான பேராசிரியர் டப்ளியு.டி. லஷ்மனால் சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முனசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. (ரி1)

## இலங்கைக்கான பயணக் கட்டுப்பாடுகளை நீக்கியது பிரிட்டன்



இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த பயண கட்டுப்பாடுகளை பிரிட்டன் நீக்கி யுள்ளது.

இதன்படி, ஜூலை 24 முதல், அத்தியாவசிய மற்ற அனைத்து சர்வதேச பயணங்களுக்கும் எதிரான ஆலோசனையிலிருந்து இலங்கைக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று பிரித்தானிய வெளியுறவு மற்றும் கொமன்வெல்த் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று அபாயங்களின் தற்போதைய மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## தப்பிய நோயாளியால் மீண்டும் ஆபத்து

*எச்சரிக்கின்றார் தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவு விசேட வைத்தியர்*

கொழும்பு, ஜூலை 26
ஐ.டி.எச். வைத்தியசாலையில் இருந்து கொரோனா நோயாளி ஒருவர் தப்பிச்சென்றமையினால் மீண்டும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தப்பிச்சென்ற இந்த நோயாளி சமூக மட்டத்தில் மக்களுடன் தொடர்புபட்டாரா என்பது தொடர்பில் ஆராய்ந்து ப்பார்க்க வேண்டும். இந்த நோயாளி கொழும்பில் எந்தெந்த இடங்களுக்குப் பயணித்தார். அவர் எந்த நபர்களுடன் பழகினார் என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்பட்டு வருகின்றது. இந்த நபர் மக்களுடன் தொடர்புபட்டிருந்தால் அந்த நபர்களை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்த நோயாளி சமூகத்திற்குள் சுற்றித்திரிந்தமை ஆபத்தானதாகும். இந்நிலையில் கொரோனா அவதானம் சமூகத்திற்குள் ஏற்பட்டுள்ளது. அவர் சென்ற இடங்களை உடனடியாகக் கண்டுபிடித்து அவர் பழகியவர்கள் தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டும். இந்த நோயாளியுடன் உரையாடியிருந்தால் உடனடியாக சுகாதாரப் பிரிவுக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் இருந்து நேற்றுமுன்தினம் தப்பிச்சென்ற நிலையில் கைது செய்யப்பட்ட கொரோனா நோயாளி சென்ற இடங்கள் குறித்து பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த விசாரணைக்காக சி.சி.ரி.வி காணொலிகளையும் திரட்டிவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். (ரி3)

## இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 26
வாகன விபத்தில் சிக்கி காயமடைந்த ஒருவரும், தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த ஒருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 58 வயதுடைய நபர் ஒருவரும், மீசாலை வடக்கைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவருமே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ரி2-9)

## பயணிகள் பஸ்ஸில் பற்றியது தீ

அம்பாறை, ஜூலை 26
அம்பாறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் கண்டி, தெல்தெனிய பகுதியில் திடீரென்று தீப்பற்றி எரிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதில் பயணித்த பயணிகள் அவசர அவசரமாக இறக்கப்பட்டு காயங்களின்றி காப்பாற்றப்பட்டனர். சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.45 அளவில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் மற்றும் கண்டி மாநகர சபையின் தீயணைப்பு பிரிவு அதிகாரிகள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தினர். தீப்பரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை. தெல்தெனிய பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (து)



## மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தேன்

*மனம் திறந்தார் தப்பித்த நோயாளி*

கொழும்பு, ஜூலை 26
அங்கொட ஐ.டி.எச். வைத்தியசாலையில் இருந்து தப்பிச்சென்ற கொரோனா நோயாளி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டார். இந்நிலையில் வைத்தியசாலையில் தப்பிச்சென்றமைக்கான காரணம் என்ன என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் வினவியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த அவர்,

யோசித்து யோசித்து மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தேன். அங்கு யாரும் இருக்கவில்லை. அதனால் தான் தப்பி வந்துவிட்டேன். அதிகாலை 4.30 மணியளவில் வைத்தியசாலையில் இருந்து வெளியேறி, 9 மணியளவில் புறக்கோட்டைக்கு வந்துவிட்டேன். ஐ.டி.எச். இல் இருந்து வெல்லம்பிட்டிய ஊடாக புறக்கோட்டைக்கு நடந்தே வந்தேன். எந்தவொரு கடைகளிலும் உணவு உட்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

## பச்சை மிளகாய் கிலோ 400

குருநகர், ஜூலை 26
திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் பச்சை மிளகாய் கிலோ 400 ரூபாவுக்கும் சின்ன வெங்காயம் கிலோ 80-100 ரூபாவுக்கும் பெரிய வெங்காயம் 100 ரூபாவுக்கும் உருளைக்கிழங்கு 160 ரூபாவுக்கும் முருங்கைக்காய் கிலோ 80 ரூபா தொடக்கம் 100 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-51)

## கோபுர மணிக்கூடு இயங்கா நிலையில்

குருநகர், ஜூலை 26
யாழ்ப்பாணத்தின் மணிக்கூட்டுக் கோபுரத்திலுள்ள மணிக்கூடு இயங்காத நிலையில் உள்ளது.
பல வாரங்களாக ஒரே நேரம் காட்டியவாறு உள்ளது. அதை இயங்கவைக்க யாழ்ப்பாண மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரியுள்ளனர். (த-51)

### குருபரன் விவகாரம் குறித்து

## மானியங்கள் ஆணைக்குழுவுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
காணாமற்போனோர் தொடர்பான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான வழக்கில் சம்பந்தப்பட்டமைக்காக கலாநிதி குமாரவடிவேல் குருபரன் விடயத்தில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அவசியமற்ற அழுத்தத்தை ஏற்படுத்தியமை தொடர்பாகவும், பல்கலைக்கழகங்களின் சுயாதீனத் தன்மையில் தலையிடுவதைத் தவிர்க்குமாறும் கோரி இலங்கை ஆசிரியர் சங்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமையால் பல அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை 2011 இலிருந்து அவரை நீதிமன்ற செயற்பாடுகளில் ஈடுபட அனுமதி வழங்கியிருந்த நிலையில் இன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அவசியமற்ற தலையீடு கவலையளிக்கிறது.

தாம் பணியாற்றும் துறைசார்ந்து, அதனை விருத்திசெய்யும் பொருட்டு, பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தமது துறைசார் அனுபவத்துக்காகச் செயற்படுவது சாதாரண விடயமாகும். அதன் அடிப்படையில் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் இந்த நடைமுறை உண்டு.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் வடக்குப் பகுதியில் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், காணாமற்போனோருக்கு நீதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது சமூக வேண்டுகோளாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை தனது சுயாதீனத்தன்மையின் அடிப்படையில் 2011 முதல் குருபரனுக்கு அனுமதி வழங்கியிருந்த நிலையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பேரவையின் சுயாதீனத்தன்மையில் தலையீடு செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

சட்டத்துறையில் புலமைவாய்ந்த குருபரனை பல்கலைக்கழக செயற்பாட்டிலிருந்து விலக வைப்பது வெற்றிடத்தை ஏற்படுத்தக்கூடியதாகும்.

இந்தவிடயம் தொடர்பாக, ஆராய்ந்து பொருத்தமான செயற்பாட்டை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று சங்கம் தனது கடிதத்தில் கோரியுள்ளது. (து)

## வலி.மேற்கு மலருக்கான ஆக்கங்கள் அனுப்பவும்

யாழ்ப்பாணம், ஜூலை 26
வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவின் பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து வருடந்தோறும் பணுவில் இதழினை 2015 ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக இந்த வருடமும் அதன் ஆறாவது மலரை 'பணுவில் இதழ்.6' எனும் பெயரில் வெளியிட உள்ளோம்.

பல்சுவை ஆண்டிதழாக வெளிவரும் இந்த மலருக்காக பிரதேசஞ்சார் தொல்லியல், வரலாறு, ஆன்மிகம், சமூகவியல், மானிடவியல், கலைமரபுகள், வாழ்வியல், மரபுரிமைகள், வழக்காறுகள் மற்றும் பொது விடயங்கள் சார் ஆவணப்படுத்தல்கள் சார்ந்த ஆக்கங்கள் ஆய்வுக் கட்டுரைகளாகவும், கட்டுரைகளாகவும், பத்தி எழுத்துக்களாகவும், புனைகதைகளாகவும், கவிதைகளாகவும் வரவேற்கப்படுகின்றன.

ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர், பிரதேச கலாசாரப் பேரவை, வலிமேற்கு, சங்கானை' எனும் முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று வலி.மேற்கு பிரதேச செயலாளர் திருமதி பொ.பிரேமினி கூறியுள்ளார். (து)


பாராளுமன்றத் தேர்தல் 2020



யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை பட்டதாரியும், மிகச்சிறந்த சமூக சித்தனையாளரும் சமகால தேவைகளை வெளிக்கொணரும், சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், முற்போக்கு வாதி, ஆகிய எமது நண்பர்

வேதநாயகம் தபேந்திரன்
(B.COM, PGD, PDS, MA)

9 X அவர்கள் பாராளுமன்ற தேர்தலில் யாழ் கிளிநொச்சி மாவட்டங்களில் வேட்பாளராக போட்டியிடுகின்றார்

எமது நண்பர் வெற்றி பெற்று நம்மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டுமென வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இளம் தலைமுறையினரின் புதிய வருகை
சீரிய, நேரிய பாதைக்கான மாற்றம்
உங்கள் கைகளில்

யாழ். பல்கலைக்கழக நண்பர்கள்


## கூட்டமைப்பின் பரப்புரை வியாழன்று சுழிபுரத்தில்

### 10 வேட்பாளர்களும் பங்கேற்பர்

யாழ்ப்பாணம், ஜூலை 26
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் சுழிபுரம் காளுவன் சந்திருக்கு அருகில் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சபை தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில்,

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், உதயன் குழுமத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், யாழ்ப்பாண மாநகர மேயர் இ.ஆனல்ட், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், திருமதி சசிகலா ரவிராஜ், கு.சுரேந்தி ரன், வே.தபேந்திரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையினர் இதை ஏற்பாடு செய்துள்ளனர். (து)

## முன்பள்ளிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்

மாத்தறை, ஜூலை 26
முன்பள்ளி பாடசாலைகள் முறைமையை அமைச்சு ஒன்றின் கீழ் கொண்டுவந்து பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவில் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் மாத்தறையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் முக்கிய பணியாகக் கருதி முன்பள்ளி பாடசாலைகள் முறைமையை அமைச்சு ஒன்றின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். (ஐ)

## 'ஜனாஸா போல் இருந்தோர் வாக்கு கேட்க வருகின்றனர்

*சாடுகின்றார் ஹுனைஸ் பாரூக்*



மன்னார், ஜூலை 26
முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரித்த போது "ஜனாஸா" போல் இருந்தவர்கள் இப்போது மக்களிடம் வந்து வாக்குக் கேட்கின்றனர் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்.

உப்புக்குளத்தில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த காலங்களில் எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்? எவருக்கு வாக்களிக்க வேண்டும்? என்ற தேர்வுகள் நமக்கு இருந்திருக்கலாம். இப்போது அந்தக் கேள்விக்கு இடமேயில்லை. இன்று சிறுபான்மை சமூகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அநீதிகளை எதிர்ப்பவர்களின் குரல்வளையை நசுக்க வேண்டுமென்ற சிந்தனை மேலோங்கியுள்ளது.

நாங்கள் ஆளுங்கட்சியில் இருந்தால் உங்களுக்கு பாதுகாப்புக் கிடைக்கும் என்று பசப்பு வார்த்தைகளைக் கூறுபவர்கள், கடந்த காலத்தில் பெட்டிப் பாம்பாக இருந்தார்கள். அவர்களின் கதைகளை நம்பாமல், அனைத்து சமூகத்தையும் அரவணைக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கு, உங்கள் வாக்குகளை அளியுங்கள் - என்றார். (எ)

# தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதே சிறந்த தெரிவு

## டெனீஸ்வரன் தெரிவிப்பு



**மன்னார், ஜூலை 26**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நாடாளுமன்றம் செல்வோர் உரிமைக்காகக் குரல் கொடுங்கள். புனர்வாழ்வு பெற்ற போராளிகள் அபிவிருத்திப் பணிகளில் திறமையானவர்கள். அவர்களை அரசியலுக்குள் உள்வாங்கி அவர்களிடம் மாகாண சபை அதிகாரத்தை ஒப்படைக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிர்வாகம் ஆவன செய்ய வேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அபிவிருத்திக்காக மாகாண சபைக்கு நிதியை ஒதுக்கீடு செய்து அபிவிருத்தியை மாகாண சபையிடம் விட்டுவிடுங்கள். ஓரிரு நாள்களில் நாம் எமது உரிமையை வென்றெடுக்கலாம் என்று எதிர்பார்க்கவும் முடியாது, நம்பவும் முடியாது. இவற்றை இந்த தீபாவளி அல்லது பொங்கலுக்கு முன் இந்த உரிமையை பெற்றுத் தருவோம் என்ற விடயமும் பொருத்தமானது என நான் கருதவில்லை.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் நாம் யாருக்கு வாக்களிப்பது என்ற கேள்வி இன்று எல்லோர் மனதிலும் தோன்றியிருக்கின்றது. நாம் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்போம். இது எமது தலைவரால் உருவாக்கப்பட்டதொன்றாகும். ஆனால் தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பல அதிருப்திகளும் இருக்கின்றன. அதில் பேசி உடனடித் தீர்வுகாணும் விடயங்கள் பல இருக்கின்றன. இந்தக் கூட்டமைப்பில் பலர் வைக்கின்ற குற்றச்சாட்டுக்களைவிட எனக்கு ஒரு விட யத்தில் அதிகமாகவே இருக்கின்றது.

கூட்டமைப்பினர் மீது சிலர் சேறுபூசி வருகின்றனர். இதையிட்டு நாம் அலட்டிக் கொள்ள வேண்டாம். அவர்களும் ஒரு நேரத்தில் எம் பக்கம் திரும்பி வருவார்கள். தற்பொழுது வன்னித் தேர்தல் தொகுதியில் 405 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 4000 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் நாம் கவலை அடையத் தேவையில்லை.

எமது மக்கள் நாடாளுமன்றம் அனுப்புவது அபிவிருத்திக்காக அல்லவோ அமைச்சர் பதவிகளைப் பெறுவதற்காகவோ அல்ல. மாறாக தமிழ் மக்களின் உரிமைகளை 'வென்றெடுக்கவே அனுப்புகின்றனர். ஆகவே மற்றவர்கள் சொல்லுகின்றார்கள் என்று நாடாளுமன்றம் செல்வோர் மாயைக்குள் அகப்படாமல் உரிமைக்காக குரல் ஓங்கட்டும் அபிருத்திக்காக மாகாண சபைக்கு நிதியை ஒதுக்கவும் உங்கள் செயல்பாடுகள் அமையட்டும்- என்றார். (எ-60)

# மற்றொரு கொரோனா சந்தேகநபரும் ஓட்டம்

கொழும்பு, ஜூலை 26
கொரோனா வைரஸ் தொற்றியவர் எனும் சந்தேகத்தில் கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த மற்றொரு நோயாளி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த 22 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே தப்பிச் சென்றுள்ளார்.

எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்த இந்தச் சந்தேகநபர் வீடொன்றைக் கொள்ளையிட்டமை தொடர்பாக மத்தேகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த நபருக்கு காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டதால் கொரோனா தொற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஐ.டி.எச். மருத்துவமனையில் இவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

கொரோனாத் தொற்றுப் பரிசோதேனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் வரையில் அவர் மருத்துவமனை விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர், கடந்த 23 ஆம் திகதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இந்த நபரைக் கைது செய்வதற்கான விசேட சிறப்பு அறிக்கை நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# கால்வாய்க்குள் பாய்ந்தது கார்

கொழும்பு, ஜூலை 26
கால்வாய்க்குள் பாய்ந்த கார் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்து கொழும்பு 15 மட்டக்குளி காக்கைதீவு பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

விபத்தில் சாரதி காருக்குள் இருந்து பாய்ந்து அதிர்ஷ்டவாசமாக உயிர்தப்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மட்டக்குளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)







# தமிழ் மக்கள் யார், யாரை வெல்ல வைப்பார்கள்?

நிலாந்தன்

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் உங்களுக்கு எத்தனை ஆசனங்கள் கிடைக்கும் ? என்று எந்தக் கட்சியைக் கேட்டாலும் அவர்கள் கண்ணை மூடிக் கொண்டு கூறுகிறார்கள் குறைந்தது மூன்று ஆசனங்கள் என்று.

கட்சிகள் மட்டுமல்ல சுயேச்சைக் குழுக்களும் அப்படித்தான் நம்புவதாகத் தெரிகிறது. உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் பட்டம் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு தனக்கு 3 ஆசனங்கள் கிடைக்கும் என்று கூறுகிறது. கிளிநொச்சியில் சந்திரகுமாரின் ஆதரவாளர்களும் அங்கே ஒரு மாற்றம் ஏற்படும் என்று முகநூலில் எழுதுகிறார்கள். ஐங்கரநேசனும் தான் வெல்ல முடியும் என்று நம்புகிறார்.

ஒரு கூர்மையான அவதானி ஒருவர் பகிடியாகச் சொன்னார் "இப்படியே எல்லா கட்சிகளுக்கும் 3 ஆசனங்கள் என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் யாழ்ப்பாணத்தில் மொத்தம் 12 க்கும் குறையாத ஆசனங்கள் இருக்க வேண்டும். ஆனால் இருப்பது மொத்தம் எழு ஆசனங்கள் தான்" என்று. யாழ். தேர்தல் மாவட்டத்தில் மட்டுமல்ல முழு வடக்கிலும் கிழக்கிலும் நிலைமை இதுதான்.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தாங்கள் வெல்வோம் என்ற நம்பிக்கையோடு உழைப்பதில் தவறில்லை. நேர்க் கணியமாகச் சிந்திப்பது தானே வாழ்க்கையும் அரசியலும். எனவே வெற்றி இலக்கை குறித்து அவர்கள் நம்பிக்கையோடு இருப்பதில் தவறில்லை. ஆனால் தங்களுடைய உயரம் எவ்வளவு என்பது குறித்து அவர்களிடம் சரியான மதிப்பீடு இருக்க வேண்டும். அவ்வாறான மதிப்பீடு எத்தனை தமிழ்க் கட்சிகள் மத்தியில் உண்டு?

முதலாவதாக கூட்டமைப்பு. ஒப்பீட்டளவில் தமிழர் தாயகம் எங்கும் அதாவது வடக்கு கிழக்கு என்ற




இரண்டு பகுதிகளையும் உள்ளடக்கி பரவிக் காணப்படும் ஒரே கட்சி அதுதான். கடந்த தேர்தல்களில் அது பெற்ற வாக்குகளை வைத்துக் கணித்தால் ஒப்பீட்டளவில் பெரிய வாக்குத் தளம் அந்தக் கட்சிக்கு தான் உண்டு. அப்படி ஒரு வாக்குத் தளம் இருப்பதை நம்பித்தான் இப்பொழுதும் கட்சிக்குள் குமுறிக் கொண்டிருக்கும் அதிருப்தியாளர்கள் கட்சியை உடைத்துக் கொண்டு வெளியே வராமல் இருக்கிறார்கள். கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் உட்பூசல்கள் பாரதூரமானவை. கட்சி ஆட்கள் ஒருவர் மற்றவரை பகிரங்கமாக விமர்சிக்கும் ஒரு நிலைமை. ஒருவர் ஒட்டிய சுவரொட்டி மீது மற்றவர் தன்னுடைய சுவரொட்டியை ஒட்டுகிறார். அந்தப் படங்களை வேறு ஒருவர் முகநூலில் பிரசுரிக்கிறார். .ஆனால் கட்சித் தலைமையோ எதையுமே கட்டுப்படுத்தும் சக்தியின்றி காணப்படுகிறது.

இவ்வளவு உட்கட்சிப் பூசல்களின்மத்தியிலும் அதிருப்தியாளர்கள் கட்சியை உடைத்துக் கொண்டு வெளியே வராததற்குக் காரணம் அந்த வாக்குத் தளம் தான். அதுவே அவர்களுடைய பலம்.

ஆனால் இம்முறை அந்த வாக்குத் தளம் சரியுமா? கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அதில் கிட்டத்தட்ட 30 வீத வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் அது உள்ளூராட்சித் தேர்தல். அதில் உள்ளூர் உணர்வுகள் அதிகம் செல்வாக்குச் செலுத்தும். சாதி, சமயம்,இனசனம், கிராமம் ,தெரிந்த முகம் போன்ற இன்னோரன்ன அம்சங்கள் அதில் செல்வாக்குச் செலுத்தும். ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் அப்படியல்ல. இதில் கட்சி அரசியலே முன்னுக்கு வரும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பே அதிக ஆசனங்களைப் பெற்றது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வரையிலும் தமிழ்த் தேர்தல் அரங்கில் அந்தக்கட்சிக்கு ஏகபோகம் கிடைத்தது. இம்முறை அந்த ஏகபோகம் சோதனைக்குள்ளாகுமா?

அடுத்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. கடந்த பதினொரு ஆண்டுகளாக தனது கொள்கைகளை மக்கள் மயப்படுத்துவதில் அந்தக்கட்சி மெது மெதுவான வெற்றிகளைப் பெற்று வந்துள்ளது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அக்கட்சி முன்னரை விட முன்னேறியது. அந்த வெற்றியானது முதலாவதாக அந்தக்கட்சியின் உழைப்பால் கிடைத்தது. இரண்டாவதாக கூட்டமைப்பின் மீது உள்ள அதிருப்தியால் கிடைத்தது. மூன்றாவதாக தமிழ்மக்கள் பேரவையோடு தன்னை அடையாளபடுத்தியதால் கிடைத்தது. நாலாவதாக மாற்று அணிக்கு வேறு போட்டிகள் இல்லாத ஒரு களத்தில் கிடைத்தது. ஆனால் வரவிருக்கும் தேர்தலில் அப்படியல்ல . மாற்று அணிக்கு போட்டியாக விக்னேஸ்வரனின் கூட்டணி காணப்படுகிறது. எனவே இம்முறை கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள் சைக்கிள், மீன் ஆகிய இரண்டு சின்னங்களுக்கு இடையே யோசிக்க வேண்டிய ஒரு நிலை. முன்னணி கடுமையாக உழைக்கின்றது. குறிப்பாக கொவிட்19 நிவார ணங்களை ஒரு பிரசார உத்தியாக வெற்றிகரமாக முன்னெடுத்த கட்சிகள் இரண்டு. ஒன்று அங்கஜனின் அணி மற்றது முன்னணி. அதுபோலவே அதிகம் இளைஞர்கள் இறங்கி வேலை செய்வதும் இந்த இரண்டு அணிகளுக்கும்தான். தனது உழைப்பின் பயனாக தனது பலம் அதிகரித்திருப்பதாக முன்னணி நம்புகிறது.

மூன்றாவது விக்னேஸ்வரனின் கூட்டணி. இவர்களில் யாருக்குமே நிரூபிக்கப்பட்ட வாக்குத் தளம் கிடையாது. விக்னேஸ்வரன் மாகாணசபைத் தேர்தலில் பெற்ற வாக்குகள் பெருமளவுக்கு அவர் கூட்டமைப்பின் வேட்பாளராக இருந்ததால் பெற்றவைதான். அவருடைய தனி வாக்குத்தளத்தின் பருமன் எவ்வளவு என்பதனை வரும் தேர்தலில் தான் நிரூபிக்கவேண்டும். இது அனந்தி சசிதரனுக்கும் பொருந்தும் ,அருந்தவபாலனுக்கும் பொருந்தும். இவர்கள் மூவரும் தமது சொந்த வாக்குத் தளங்களை பலப்படுத்துவதற்காக கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தவிர சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோரும் இந்த அணிக்குள் உண்டு. இவர்களும் பலமான வாக்குத் தளங்களைக் கொண்டவர்கள் அல்ல. கடந்த மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தலின் போதான சுரேஷ் பிரேமச்சந்திரனின் வாக்குத் தளம் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தைப் பெறப் போதுமா? சிவாஜி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அனந்தியோடு நின்று பெற்ற வாக்குகளும் ஒரு நாடாளுமன்ற ஆசனத்துக்குப் போதாது. அதாவது இவர்கள் அனைவரும் தமது வாக்குத் தளங்களைப் பலப்படுத்தி நிரூபிக்க வேண்டியவர்கள்.

கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள் அனைவரும் இந்தக் கூட்டணியின் சின்னமாகிய மீனுக்குத் தான் வாக்களிப்பார்கள் என்றில்லை. அவர்களில் இளம் வயதினர் அதிகம் சைக்கிளை நோக்கிப் போவதாக ஒர் அவதானிப்பு உண்டு. அதேசமயம் நடுத்தர வயதினரும் முதியவர்களும் மீன் சின்னத்தை நோக்கிப் போவதாக ஒர் அவதானிப்பு உண்டு.


நாலாவது, டக்ளஸ் தேவானந்தா. அவருக்கு பலமான ஒரு வாக்குத் தளம் உண்டு. ஆனால் அது வரையறைக்கு உட்பட்டது. அவருடைய வாக்காளர்கள் அனைவரையும் அவருக்கு நேரடியாகத் தெரியும் என்று கூறத்தக்க அளவுக்கு அவருடைய வாக்குத் தளம் அவருடைய கைக்குள் இருக்கிறது. ஆனால் அது வரையறைக்குட்பட்ட ஒரு வாக்குத் தளம். பெருமளவுக்கு தமிழ்த் தேசிய எதிர்நோக்கு நிலை கொண்ட வாக்காளர்களும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களும் அந்த வாக்குத் தளத்துக்குள் அடங்குவர்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால் கொவிட்19 சூழலுக்குள் அங்கஜன் தன்னுடைய போட்டியிடும் தகமையை அதிகரித்துக் கொண்டிருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அவரும் டக்ளஸ் தேவானந்தாவின் வாக்குத் தளம் காணப்படும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைத்தான் அதிகமாகக் குறி வைக்கிறார். அவர் மட்டுமல்ல தேவானந்தாவிடம் இருந்து பிரிந்து சென்ற சந்திரகுமாரும் அதைத்தான் செய்கிறார். விக்னேஸ்வரனிடம் இருந்து பிரிந்து சென்ற ஐங்கரநேசனும் அதைத்தான் செய்கிறார்.

(மறுபக்கம் பார்க்க)

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தாங்கள் வெல்வோம் என்ற நம்பிக்கையோடு உழைப்பதில் தவறில்லை. நேர்க் கணியமாகச் சிந்திப்பது தானே வாழ்க்கையும் அரசியலும். எனவே வெற்றி இலக்கைக் குறித்து அவர்கள் நம்பிக்கையோடு இருப்பதில் தவறில்லை. ஆனால் தங்களுடைய உயரம் எவ்வளவு என்பது குறித்து அவர்களிடம் சரியான மதிப்பீடு இருக்க வேண்டும். அவ்வாறான மதிப்பீடு எத்தனை தமிழ்க் கட்சிகள் மத்தியில் உண்டு?

# கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிப்பது சிங்களப் பேரினவாதத்தை பலப்படுத்திவிடும்!



எச்சரிக்கின்றார் சித்தார்த்தன்

நேர்கண்டவர்: இரா. புத்திரசிகாமணி

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.– கிளிநொச்சி மாவட்ட வேட்பாளரும், புளொட் அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் உதயனுக்கு அளித்த நேர்காணல் இது.**

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பித்தத்தன் நோக்கத்தில் இருந்து விலகிச் செல்வதாலேயே கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றதாகவும் நீக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இது சரியா?

**பதில்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவரையும் விலக்கவில்லை. ஒவ்வொருவரும் தமது தேவைக்கேற்ப கூறிக்கொள்கின்றனர்.

**கே:** தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புதான் வடக்கு மாகாண முதலமைச்சராக விக்னேஸ்வரனை முதலில் இறக்குமதி செய்தது. அவர் தானே உடைத்துக்கொண்டு போனார்?

**ப:** விக்னேஸ்வரனை உள்ளீர்ப்பதற்குப் பலத்த எதிர்ப்புக்கள் கூட்டமைப்புக்குள் வெளிப்பட்டன. ஆனால் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், எல்லோருடனும் பேசி ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தினார். அதன் பின்னர் எதிர்ப்புக்கள் இருந்தாலும் ஏகமனதாக எல்லோரும் விக்னேஸ்வரனுக்காக பரப்புரை செய்து, மக்களிடையே அவருக்கு ஆதரவைப் பெருக்கி, மிகப் பெரும் வெற்றியைத் தேடித் தந்தோம். ஆனால் அவரிடம் அந்த ஐக்கிய உணர்வு இல்லை. முதலமைச்சராக இருந்து கொண்டே கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வந்தார். 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது கூட்ட மைப்புக்கு எதிராகவே செயற்பட்டார். உள் வீட்டில் இருந்துகொண்டே கூரையை பிரித்துவிட்டவர் இந்த மனிதர். தனது முதலமைச்சர் பதவி முடிவுறும் காலம் வரை எல்லாவற்றையும் அனுபவித்து விட்டு ஆட்சிக்காலம் முடிந்ததும் பிய்த்துக் கொண்டு போய் புதிய கட்சியை ஆரம்பித்தார். இப்போது அது எங்கே என்றே தெரியவில்லை. விக்னேஸ்வரன் நம்பகத் தன்மை இல்லாத ஒரு மனிதர்.

**கே:** கூட்டமைப்புக்கு எதிராகத்தானே தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது?

**ப:** கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றோர் தான் விக்னேஸ்வரனை மூளைச்சலவை செய்து பேரவைக்கு தலைவராக்கினர். நாங்களும் இருந்தோம். இந்தப் பேரவை ஒரு நிரந்தரமான சிவில் அமைப்பாக இயங்க வேண்டும். எந்த அரசியல் கட்சியையும் சாராது, எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சமுதாய மேம்பாடு அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகளையும் அழுத்தங்களையும் கொடுக்கக் கூடிய ஒரு பலமிக்க சக்தியாக இருக்க வேண்டும் என்பதே நோக்கம். ஆனால் சிலருக்கு ஏற்பட்ட தலைமைத்துவ ஆசை பேரவையையே அழித்துவிட்டது.

**கே:** பேரவையும் தேய்ந்து போய், பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டணி உருவானது. ஆனால் இப்போது கஜேந்திரகுமார் தனித்துத்தானே போட்டியிடுகின்றார்.

**ப:** நான் அறிந்த வகையில் கேள்விப்பட்ட வகையில் கஜேந்திரகுமாருக்கும் அவருடைய கட்சியினருக்கும் தனிப்பட்ட வகையில் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோரைப் பிடிக்காது. அவர்கள் நிலையற்றவர்கள். அவர்களுடன் இணைந்து செயற்பட முடியாது என்றே தமிழ் காங்கிரஸ் தனித்து போட்டியிடுகின்றது எனக் கூறப்படுகிறது.

**கே:** விக்னேஸ்வரன் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவதாகக் கூறியுள்ளாரே?

**ப:** காலம் கடந்த ஞானம். அவர் கூட்டமைப்புடன் இணைந்து ஒரே குழுவாக வந்திருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் வீட்டை உடைத்துக் கொண்டு வெளியேறி மீண்டும் தாய் வீட்டுக்கு வந்து செயற்பட விரும்பும் போது அதை வரவேற்கத்தான் வேண்டும்.

**கே:** இப்போது தென்னிலங்கை சிங்களக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கை சின்னத்தில் போட்டியிடும் ஒரு நபர், தனக்குப் பின்னால் வடபகுதியின் இளையோர் திரண்டுள்ளதாகக் கூறுகிறாராமே?

**ப:** அவர் கையில் போட்டியிட்டாலும் காலில் போட்டியிட்டாலும் வெற்றி பெற முடியாது. இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறி அழைத்துச் செல்கின்றார். இன்று கொரோனா சர்வதேசத்தையே அதலபாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது. இலங்கை பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவை அடைந்துள்ளது. கோத்தாபய அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் தடுமாறுகின்றார். ஆள்குறைப்பு செய்வதா? இல்லை சம்பளக் குறைப்பு செய்வதா என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார். இப்படியான நிலையில் இந்த கைக்காரர் புதிதாக எப்படி வேலை வாய்ப்பைப் பெற்றுத் தரப் போகின்றார் என்று புரியவில்லை. நன்கு படித்த இளைஞர் யுவதிகள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

**கே:** கூட்டமைப்பில் இருந்த அதிருப்தியாளர்களைப் பிரிந்து போகவிடாமல் தக்கவைத்திருப்பதற்கு வாய்ப்புக்கள் இருந்ததா?

**ப:** எல்லாம் பிரச்சினைதான். அன்று பிரிந்து போக எத்தனித்தவர்களை அரவணைத்து செயற்பட்டிருந்தால் பிரிவைத் தடுத்திருக்கலாம். நாம் தவறிவிட்டோம்.

**கே:** கூட்டமைப்புக்குள் இப்போதும் உள்ளக முரண்பாடுகள் இருக்கத்தானே செய்கின்றன. மக்கள் மத்தியில் இன்று கூட்டமைப்பின் நிலை எப்படி இருக்கின்றது?

**ப:** சிலரது சொல்லாடல்கள் மக்கள் மத்தியில் கசப்பை ஏற்படுத்தியுள்ளது உண்மைதான். அதற்காக அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது வைத்துள்ள நம்பிக்கையை மக்கள் கைவிடவில்லை. ஆதரவாகவே இருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு எதிராகப் போடப்படும் ஒவ்வொரு வாக்கும் சிங்கள பேரினவாதிகளின் கைகளைப் பலப்படுத்துவதாகவே அமையும். மக்கள் எம் பக்கம் இருக்கின்றனர். நிச்சயமாக பெருவெற்றியீட்டுவோம்.

## தமிழ் மக்கள்....

(தொடர்ச்சி)

பட்டம் சின்னத்தின் கீழ் போட்டியிடும் சுயேச்சைக் குழுவும் அதைத்தான் செய்கிறது. இவை மட்டுமல்ல தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அந்த மக்கள் தொகுதிக்குள் அதிகமாக இறங்கி வேலை செய்கிறது. குறிப்பாக வலிகாமத்தில் உள்ள நலன்புரி நிலையங்களுக்குள் அக்கட்சி கணிசமான அளவுக்கு வேலை செய்கின்றது. இப்படிப் பார்த்தால் முன்னெப்போதையும் விட தேவானந்தாவின் வாக்குத் தளத்துக்கு போட்டி அதிகரித்திருக்கிறது. அவருடைய வாக்காளர்கள் மனம் மாறுவார்களா இல்லையா என்பதை வரும் தேர்தல் நிரூபிக்கும்.

மேற்கண்டவற்றை தொகுத்துப் பார்த்தால் இம்முறை ஏற்கனவே பலமான வாக்குத் தளத்தைக் கொண்ட கட்சிகளும் கூட தமது வாக்குத் தளத்தின் நிரந்தரத் தன்மை குறித்து சந்தேகப்படும் அளவுக்கு போட்டி அதிகமாகக் காணப்படுகிறது. இதுவரை நிரூபிக்கப்பாத வாக்குத்தளங்களைக் கொண்டவர்கள் தமது பலத்தைக் கட்டியெழுப்பக் கடுமையாக உழைக்கிறார்கள். இதை மறுவளமாகச் சொன்னால் எல்லாக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தமிழ் வாக்காளர்களை அதிகமாகக் குழப்பும் ஒரு தேர்தல் களம் இது.

ஆனால் வாக்காளர்கள் எந்தக் குழப்பத்தையும் வெளிக்காட்டாமல் அமைதியாகக் காணப்படுகிறார்கள். யாருக்கு வாக்களிக்கப் போகிறார்கள் என்பதை அவர்கள் பெருமளவுக்கு பகிரங்கமாகக் கூறுவதில்லை. ஒரு ஆசிரியை சொன்னார் பள்ளிக்கூட ஓய்வு அறையிலிருந்து கதைக்கும் போது சக ஆசிரியர்கள் தாம் யாருக்கு வாக்களிக்கப் போகிறார்கள் என்பதைக் கடைசி வரை கூற மாட்டார்களாம். அதே சமயம் சனங்கள் வீடு தேடிவரும் எல்லா வேட்பாளர்களும் சொல்பவற்றைக் கேட்கிறார்கள் ஆனால் மிகக்குறைந்தளவே அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். சனங்களின் முகபாவத்தை வைத்து அவர்களுடைய அரசியல் நிலைப்பாட்டைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது என்று பிரசாரத்துக்குச் செல்லும் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்ல கொவிட்19 நிவாரணங்களை வாங்கும் போதும், ஏனைய உதவிகளைப் பெறும் போதும் குறிப்பிட்ட கட்சிகளுக்கு வாக்குறுதியளித்தபடி மக்கள் விசுவாசமாக வாக்களிக்க மாட்டார்கள் என்றும் ஒரு சமூகச் செயற்பாட்டாளர் தெரிவித்தார். நிவாரணம் எல்லாம் வாக்குகளாகி விடாது. உதவிகள் எல்லாம் வாக்குகளாகி விடாது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது இது கிளிநொச்சியில் சந்திரகுமாருக்கு நடந்தது. இதற்கு முன்னைய தேர்தல்களிலும் தமிழ் வாக்காளர்கள் அப்படித்தான் காணப்பட்டார்கள். தமது அபிப்பிராயத்தை வெளிப்படையாகக் கூறத் தயாராற்ற ஒரு மக்கள் கூட்டத்தினர் இம்முறை யார் யாரை வெல்ல வைப்பார்கள் ?

# ரயில் நிலையங்களில் ‘ஸ்மாட்’ இயந்திரங்கள்!

## *சீனாவுக்கு அனுமதியளித்தது இலங்கை*

**கொழும்பு, ஜூலை 26**

**இலங்கையின் 353 ரயில் நிலையங்களில் ‘ஸ்மாட்’ அட்டை முறைக்கான இயந்திரங்களை நிறுவும் திட்டத்தை சீனா மேற்கொள்ளவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஆசனங்களைப் பதிவுசெய்தல், இணைய அனுமதி முறை, விரைவான ரயில் சேவை என்பனவற்றுக்காக ‘ஸ்மாட்’ அட்டை முறையை விரைவில் செயற்படுத்தப்போவதாக கடந்த பெப்ரவரியில் போக்குவரத்து அமைச்சு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் அனுமதிச் சீட்டுக்களுக்கான இயந்திரங்களை நிறுவுவதற்கு சீன நிறுவனத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐந்து பொறிமுறைகளின் கீழ் பிரதான நகரங்களின் ரயில் நிலையங்களில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இது நடைமுறைக்கு வந்தால் தொலைபேசிக்கு மீள்நிரப்பல் (ரீலோட்) முறையைப் போன்று பயணிகள் ரயில்களுக்கான அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதில் மாதாந்த பொதி மற்றும் வரையறையில்லா அனுமதிச் சீட்டு போன்ற முறைகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இதற்கு அரசு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடன் பெறவுள்ளது.

2023ஆம் ஆண்டு முடிவதற்குள் இந்தத் திட்டம் முழுமைப் படுத்தப்படும் என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

# நடு வீதியில் தாய் போராட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 26

கணவனால் கைவிடப்பட்ட நிலையில் தாயொருவர் கல்லடிப் பாலத்துக்கு அருகில் நடுவீதியில் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டதோடு அந்தவிடயத்தில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

கல்லடி திருச்செந்தூர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய குறித்த பெண்ணுக்கும் கூலித்தொழில் செய்துவரும் அவருடைய கணவருக்கும் இடையே அடிக்கடி குடும்பத்தகராறு ஏற்பட்டு வருவதாகவும் இதன் காரணமாக ஏற்கனவே காத்தான்குடி பொலிஸில் முறைப்பாடு செய்து வழக்கு தொடர்ந்திருந்தபோதும். இருவரும் இணைந்து வாழ சம்மதம் தெரிவித்தனர். அதனால் அவர்களை காத்தான்குடி பொலிஸார் விடுவித்தனர்.

எனினும், இவர்களுக்கிடையேயான குடும்பத்தகராறு தொடர்ந்த வண்ணமே இருந்ததால் குறித்த பெண் தனது 7 வயது, 5 வயது மற்றும் ஒன்றரை வயது பிள்ளைகளுடன் கல்லடிப் பாலத்துக்கு அருகிலுள்ள நடுவீதியில் அமர்ந்து, நீதிகோரியும், பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்குமாறும் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அந்த இடத்துக்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் அவர்களை அழைத்துச் சென்றனர்.

இவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிள்ளைகள் மூவரும் சிறுவர் நலன் காப்பகம் ஒன்றில் சேர்க்கப்படுவார்கள் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி தெரிவித்தார். (த)

# பரிசுத் தொகையின் பகுதியை கடனாக வாங்கிய இன்ஸ்பெக்டர்

## *நீதிமன்றுக்கு பொலிஸார் அறிக்கை*

கொழும்பு, ஜூலை 26

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் தகவல் வழங்கிய நபருக்கு வழங்கப்பட்ட பணப் பரிசு தொகையில் 75 இலட்சம் ரூபாவை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் பெற்றுக் கொண்டார் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் விடுதலைப்புலி போராளிக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகையில் அரைவாசித் தொகையை அந்த பொலிஸ் அலுவலர் பெற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் 2016ஆம் தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக சட்ட விரோதமான முறையில் 20 கிலோ தங்கம் கொண்டுவரப்பட்டமை தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் பிரிவுக்கு தகவல் வழங்கியுள்ளார். அவருக்கு இலங்கை சுங்கப் பிரிவு இரண்டு கோடியே 75 இலட்சம் ரூபாவை பரிசாக வழக்கியுள்ளது.

அதில் 75 இலட்சம் ரூபாவை பொலிஸ் பரிசோதகர் தாரக சுபோத என்பவர் கடனாகப் பெற்றுக்கொண்டார் என்று தகவல் வழங்கிய நபர் முறைப்பாடு செய்துள்ளார் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. (த)

# தேர்தல் சட்ட மீறல்: இதுவரை 4,684 முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 26

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 4ஆயிரத்து 684 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் ஒரு வன்முறைகூட இதுவரை பதிவாகவில்லை என்றும் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 184 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (த)

# காணாமலாக்கப்பட்டமை பற்றிய வழக்கை விசாரிக்குமாறு பணிப்பு

## *உயர்நீதிமன்று உத்தரவு*

கொழும்பு, ஜூலை 26

காணாமல் ஆக்கப்பட்ட தேவராஜா சர்மாவினுடைய பெற்றோர் இழப்பீடு கோரி உயர்நீதிமன்றில் தாக்கல்செய்த மேன்முறையீட்டைவிசாரணைசெய்து தீர்ப்பு வழங்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜெகதீஸ்வரசர்மா மற்றும் ஜெசியம்மா ஜெகதீஸ்வரசர்மா ஆகியோர் இணைந்து இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல்செய்த உறுதிகேள் எழுத்தாணை மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

அதற்கு எதிராக மனுதாரர், உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தனர்.

அதை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் மேன்முறையீட்டாளர்களின் வழக்கை கொண்டுநடத்த வேண்டும் என்றும் 5 நீதிபதிகள் கொண்ட முழு அமர்வின் மூலம் விசாரணை செய்யுமாறும் உத்தரவிட்டது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ சுற்றி வளைப்பின் போது தேவராஜ சர்மா கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டார். அவருடைய பெற்றோர், தம்முடைய மகன் கடத்தப்பட்டு காணாமல்போன விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் அமைந்துள்ள ஜெனிவா மனித உரிமைகள் குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டை விசாரித்த ஜெனிவா மனித உரிமைகள் குழு, இலங்கை அரசு குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் 6, 7, 9 மற்றும் 10 ஆம் உறுப்பு ரைகளை மீறியுள்ளதாக கூறியுள்ளதுடன் மனுதாரர்கள் குறித்த குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 7 இன் கீழ் பாதிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில் இலங்கை அரசால் இழப்பீடு பெறுவதற்கு உரித்துடையவர்கள் எனவும் தனது கருத்தை வழங்கியிருந்தது. இந்த பரிந்துரைகளுக்குப் பதிலளித்த இலங்கை அரசு தனது எழுத்து மூல சமர்ப்பணத்தில் குறித்த காணாமல்போன தேவராஜ சர்மாவை கடத்திய இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராக விசாரணை மற்றும் தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பாதிக்கப்பட்ட தேவராஜ சர்மாவினுடைய பெற்றோரான மனுதாரருக்கு இழப்பீடு வழங்கப்படும் என்றும் உத்தரவாதம் அளித்திருந்தது. இழப்பீடு வழங்கப்படும் விடயத்தைக் கணிப்பதற்கு இலங்கை அரசு குறித்த விடயத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குபரிந்துரைசெய்திருந்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த விடயத்தை நன்கு ஆராய்ந்த பின்னர் மனுதாரர்களுக்கு ரூபா 3 கோடியே 8 லட்சத்து 88 ஆயிரம் ரூபாவை இழப்பீடாக இலங்கை அரசு வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது.

குறித்த மனுதாரர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கணிக்கப்பட்ட இழப்பீட்டை வழங்குமாறும் பல்வேறு பரிக்கைகளை முன்வைத்தும் இலங்கை அரசு அதை வழங்காமையால் பாதிக்கப்பட்ட தரப்பினர் மேற்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதிகேள் எழுத்தாணை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த நிலையிலேயே குறித்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனையடுத்து அந்தப் பெற்றோர் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு தாக்கல் செய்திருந்தனர். குறித்த மேன்முறையீட்டை ஏற்றுக்கொள்ளப்பட முடியுமா என்று உயர்நீதிமன்றில் ஆராயப்பட்டது.

திறைசேரி செயலாளர், வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் சார்பில் முற்பட்ட மேலதிக மன்றாடியார் தலைமை அதிபதி, இலங்கை உயர் நீதிமன்றத் தால் தீர்க்கப்பட்ட நல்லரட்ணம் சிங்கராசா வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் இலங்கை அரசு குறித்த குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் முதலாம் விருப்புரிமை ஆவணத்தில் கைச்சாத்திட்டமை இலங்கை அரசமைப்புக்கு முரணானது என்று தீர்க்கப்பட்டுள்ளமை யால் குறித்த வழக்கு அடிப்படையில் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டனர்.

நல்லரட்ணம் சிங்கராசா வழக்கின் நிகழ்வுகளுக்கும் சர்மா வழக்கின் நிகழ்வுகளுக்கும் முழுமையான முரண்பாடு காணப்படுவதனால் குறித்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் இழப்பீடு பெறும் உரிமையை தடுக்கமுடியாது என்று மனுதாரர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

இறுதியில் வழக்கில், நல்லரட்ணம் சிங்கராசாவின் வழக்கை அரசதரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் காரணம் காட்டுவதால் அந்த வழக்கு 5 நீதியரசர் கொண்ட முழு அமர்வின் முன்னிலையில் தீர்க்கப்பட்டுள்ளமையாலும் மேன்முறையீட்டாளரின் வழக்கையும் 5 நீதியரசர் கொண்ட முழு அமர்வின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம் அதன் விசாரணையை பெப்ரவரி 9ஆம் திகதி நடத்துமாறும் கூறியுள்ளது. (த)

# முதுகெலும்பு உள்ளவர்களை தெரிவு செய்வதே அவசியம்

## மனோகணேசன் அறிவுரை



**கொழும்பு, ஜூலை 26**

**ஆளும் கட்சியோ, எதிர்க்கட்சியோ, முதுகெலும்புள்ள, துணிச்சலுள்ள, நாட்டின் ஜனாதிபதி முதல் பிரதமர் வரை நேருக்கு நேர் நின்று கேள்வி கேட்கக் கூடிய, எமது மக்களின் அபிலாசைகளையும், துன்பங்களையும் சிங்கள மொழியில் தேசிய அரங்குகளில் எடுத்து வைக்கக்கூடிய, ஆங்கில மொழியில் சர்வதேச அரங்குகளில் எடுத்துக் கூறக்கூடிய வேட்பாளர்களை கண்டறிந்து அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.**

இவ்வாறு மனோ கணேசன் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சஜித் தலைமையிலான அரசை அமைக்கவே நாம் போராடுகிறோம். அந்த நம்பிக்கை எமக்கு நாளுக்கு நாள் வலுக்கின்றது. எமது நோக்கம், அலரி மாளிகையை கைப்பற்றுவதாகும். அங்கே பிரதமர் ஆசனத்தில் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாசவை அமர செய்வதாகும்.

எது எப்படி இருந்தாலும், ஆளும்கட்சியோ, எதிர்க் கட்சியோ, இந்த நாட்டில் ஜனநாயகரீதியாக சண்டை போட வேண்டிய இடத்தில், சண்டையிட்டு, அழுத்தம் திருத்தமாக எமது மக்களின் அபிலாசைகளுக்காக நிமிர்ந்து நின்று குரல் கொடுக்கக் கூடிய வேட்பாளர்களை அடையாளம் கண்டு அவர்களைத் தெரிவு செய்ய வேண்டியது தமிழ், முஸ்லிம் மக்களின் கடமை.

நேர்மையுள்ள, தூரப்பார்வை உள்ள, அர்ப்பணிப்பு உள்ள, துணிச்சலுள்ள, பன்மொழி அறிவுள்ள, விலை போகாத வரலாறு உள்ள, சொந்த இனப்பற்று உள்ள, சகோதர இன, மதங்களின் மீது மரியாதை உள்ள, உண்மையான தேசப்பற்றுள்ள வேட்பாளர்கள் யார் என்பதைக் கண்டறியுங்கள். இதைக் கண்டறிவது ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல. உங்கள் முன் வரும் வேட்பாளர்களை கொஞ்சம் கவனமாக ஒவ்வொருவராக அவதானித்து பார்த்தால், உண்மை அடையாளத்தை அறியலாம். எக்காரணம்கொண்டும் இதைக் கண்டறிய தவறிவிட்டீர்கள் என்றால், அடுத்து ஐந்து வருடங்கள் உங்கள் வாழ்க்கை கேள்விக் குறியாகி விடும்.

இதை நான் நாடு முழுக்க வாழும் தமிழ் பேசும் இந்து, இஸ்லாம், கத்தோலிக்க தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் சொல்கிறேன். ஓகஸ்ட் ஐந்தாம் திகதிக்கு பிறகு இதைச் செய்ய முடியாது. இப்போதே உங்கள் தீர்மானங்களை எடுங்கள் - என்றார். (எ)

# மலையகம் தொடர்பில் கனவு கண்டது நாமே



கினிகத்தேனை, ஜூலை 26

மலையகம் தொடர்பில் நாமே கனவு கண்டோம். அந்த கனவுகளை நிறைவேற்றி யுள்ளோம். எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கும் திட்டமிட்டுள்ளோம். ஆனால் தாத்தா கண்ட கனவு, அப்பா கண்ட கனவு என்று சிலர் மக்களை ஏமாற்றி வருகின்றனர் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

கினிகத்தேனை கெனில்வத்தை தோட்டத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;




ஜனாதிபதி தேர்தலின் போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது. தேர்தலில் கோத்தாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றார். தற்போது நோர்வூட்டுக்கு வந்து சென்றுள்ளார். ஆனால், இன்னும் ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்றார்கள், ஏப்ரல் என்றார்கள், தற்போது ஓகஸ்ட் மாதமும் வரப்போகின்றது. ஆயிரம் ரூபா மட்டும் வரவேயில்லை. எனவே, பொய்யுரைப்பவர்களை நாடாளுமன்றம் அனுப்பினால் அவர்கள் மீண்டும், மீண்டும் பொய்யுரைக்கவே முற்படுவார்கள்.

எனவே, மக்களுக்குச் சேவைகளைச் செய்துள்ள நாம் அவற்றைச் சுட்டிக்காட்டி உரிமையுடனேயே வாக்கு கேட்கின்றோம். பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் எமது சேவைகள் தொடரும் - என்றார். (ஐ)

# சட்டத்தில் பாரபட்சத்துடன் செயற்படுகிறது அரசாங்கம்

## குற்றஞ் சுமத்துகிறார் அஜித் பி பெரேரா



கொழும்பு, ஜூலை 26

ஒருநாடு ஒரே சட்டம் என்று கூறிய ஆளும் தரப்பினர், சாதாரண மக்களுக்கு ஒரு சட்டத்தையும், அவர்களது ஆதரவாளர்களுக்கு இன்னுமொரு சட்டத்தையும் செயற்படுத்துகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அஜித் பீ பெரேரா தெரிவித்தார்.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளால் அவர்களுக்கு மக்கள் மத்தியிலிருந்த வரவேற்பு தற்போது குறைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டாம் புவனேக பாகு மன்னனின் அரச மண்டப உடைப்பின் போதும், குருநாகல் நகரபிதா, அவரே கட்டடத்தை இடிக்க ஆணையிட்டதாக ஒத்துக் கொண்டுள்ளார்.

அவருக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு வாய்ப்புள்ள போதிலும் எதுவும் செயற்படுத்தப்படவில்லை. இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஒரே நாடு, ஒரே சட்டம் என்று கூறிக் கொண்டு வந்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சாதாரண மக்களுக்கு ஒரு சட்டம், ஏனையவர்களுக்கு இன்னுமொரு சட்டம் என்று வேறுபடுத்திக் கொண்டுள்ளார்.

முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் கைது செய்யப்படவில்லை. போலி முறைப்பாடு அளித்த முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராகவும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில் மஹிந்த ராஜபக்ஷ, தங்களது தரப்பினரின் குற்றத்தை மறைப்பதற்காக இரண்டாம் புவனேகபாகு மன்னனின் நடத்தை சரியில்லை என்றும் அதனால் கட்டடத்தை உடைப்பதில் தவறில்லை எனவும் காண்பித்து வருகின்றார்-என்றார். (ஐ)

# பயங்கரவாதிகளுக்கு இன அடையாளம் வேண்டாம்

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

பயங்கரவாதிகள் பயங்கரவாதிகளாக இருக்கவேண்டும். அவர்களுக்கு இனத்துடன் கூடிய அடையாளத்தை வழங்கக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பயங்கரவாதிகள், தமிழர்கள், சிங்களவர்கள் மத்தியில் இருக்கலாம். எனினும் அவர்களை இனங்களுடன் இணைத்து அடையாளப்படுத்தக்கூடாது.

இந்நிலையில் சஹ்ரானின் பாதுகாப்பு இல்லத்தை பிரதேசத்தில் உள்ள மக்களே படையினருக்கு காண்பித்தனர். இதேவேளை இந்த நாட்டின் பிரஜைகள் யாவரும் இலங்கையர்களாகவே கருதப்படவேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# பாடசாலை சுவரில் தேர்தல் சுவரொட்டிகள்

குருநகர், ஜூலை 26

யாழ்ப்பாணம் குருநகரில் உள்ள சில பாடசாலைகளின் மதிற் சுவர்களில் தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் சிலவற்றின் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கட்சிகளின் சின்னம் அழிக்கமுடியாதவாறு மையால் கீறப்பட்ட நிலையில் உள்ளது. இவ்வாறு அந்தச் சின்னம் கீறப்பட்ட பாடசாலைகள் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களாகவும் முன்னர் இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (த -51)

# வாக்குகளைப் பெறும் ஆயுதமாகவே இனவாதம் பயன்படுத்தப்படுகிறது

## பிரசார கூட்டத்தில் இம்ரான்


கொழும்பு, ஜூலை 26

எமது நாட்டில் வாக்குகளை பெறும் ஆயுதமாகவும், வியாபார உத்தியாகவுமே இனவாதம் பயன்படுத்தப்படுகிறது. இவற்றில் இருந்து வேறுபட்டவனே நான் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கோமரங்கடவல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ராஜபக்ஷ சகோதரர்களால் எமது நாட்டில் அரசியல் நோக்கத்துக்காக பரப்பப்பட்ட இனவாதம் இன்று நாம் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கவைத்திருக்கிறது. சுமார் இருபது வருடங்களுக்கு முன் நாம் இங்கு எவ்வாறு ஒற்றுமையாக இருந்தோம் என எமது பெற்றோர்கள் கூறிக் கேட்டிருப்போம்.



எனது தந்தை முஸ்லிம் பிரதேசங்களில் என்ன அபிவிருத்தி செய்தாரோ அதையே தமிழ் மற்றும் சிங்களப் பிரதேசங்களிலும் செய்தார். அன்று எம் மத்தியில் இனவாதம் இருக்கவில்லை. கட்சி வேறுபாடு மாத்திரமே காணப்பட்டது. அதுவும் தேர்தல் காலங்களில் மட்டும். எனது தந்தையின் அரசியல் பயணம் எவ்வாறு காணப்பட்டதோ அதுபோன்றே நானும் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவன் - என்றார். (ஐ)

# இனப்படுகொலைக்குத் தேவை சர்வதேச விசாரணையே!

## கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 26

**இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை மிகவும் அவசியமென்று கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங் வலியுறுத்தியுள்ளார்.**

கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில், 1983 ஜூலை 23 ஆம் திகதிக்கும் 29ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன. அதாவது குறித்த காலப்பகுதியில் பெரும்பாலான காடையர் கும்பல்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இனக்கலவரத்தில் ஈடுபட்டன. இக் கலவரத்தில் 3ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர். ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் தங்கள் வீடுகளை இழந்தனர்.

இத்தகைய நிகழ்வுகளால் உள்நாட்டுப் போர் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வெளிநாடுகளில் வாழவேண்டிய சூழ நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இனப்படுகொலை மற்றும் உள்நாட்டுப் போர் ஏற்படுத்திய துயரங்களை இன்னமும் அனுபவித்துக்கொண்டிருப்பவர்களின் நிலைமைகளை நாங்கள் உணர்கின்றோம். அதேநேரம் எங்களைப் பிளவுபடுத்தக்கூடிய வெறுப்பின் வலிமை குறித்து நாங்கள் அலட்சியமாக இருக்கக் கூடாது.

இலங்கையின் உள்நாட்டுப்போரின் இருண்ட நாள்கள் நல்லிணக்கம், நீதி மற்றும் உண்மை ஆகியனவற்றை ஏற்படுத்துவதிலும் இன்னமும் துயரத்தை அனுபவிப்பவர்களின் காயங்களை ஆற்றுவதிலும், நாங்கள் எங்கு வாழ்ந்தாலும் எங்களுக்குக் கூட்டுப் பொறுப்புள்ளதை நினைவுபடுத்தி நிற்கின்றன. எனவே இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை அவசியமென்று நாமும் வலியுறுத்துகின்றோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (து)

## தனியார் பஸ்ஸினுள் வெளிநாட்டவர் உயிரிழப்பு

### கொரோனா எனச் சந்தேகம்

கொழும்பிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றில் அமெரிக்கப் பிரஜை திடீரென உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குறித்த அமெரிக்கப் பிரஜை நிட்டம்புவ - யக்கல பிரதேசத்தில் வைத்து பஸ் வண்டியில் உட்பிரவேசித்துள்ளார். இதனையடுத்து பஸ் பயணித்துக்கொண்டிருந்தவேளை திடீரென வெளிநாட்டுப் பிரஜை உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்திவருவதோடு உயிரிழந்தவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா இல்லையா என்ற பரிசோதனைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (ஐ)



## ஆயுதக் களஞ்சியசாலை கண்டுபிடிப்பு

கேகாலை, ஜூலை 26

கேகாலை - ருவன்வெல்லையில் வீடொன்றில் இயங்கி வந்த, பாதாள உலகக் குழுவுக்குச் சொந்தமான பாரிய ஆயுதக் களஞ்சியசாலை ஒன்று விசேட அதிரடிப்படையினால் நேற்றுச் சுற்றிவளைக்கப்பட்டது. சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், வீட்டில் இருந்து 5 துப்பாக்கிகள், பாதியளவில் தயாரிக்கப்பட்டிருந்த துப்பாக்கி பாகங்கள், தோட்டாக்கள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இங்கு தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் நாட்டின் பல பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பாதாள உலகக்குழுவினரின் பயன்பாடுகளுக்காக இந்தத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

### சுற்றிவளைப்பில்

## 1,750 பேர் கைது

கொழும்பு, ஜூலை 26

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணி தொடக்கம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரையான 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது, பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஆயிரத்து 750 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள், ஆயுதங்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 276 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டுகளில் 691 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஹெரோய்ன் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 301 பேரும், கஞ்சா வைத்திருந்தனர் குற்றச்சாட்டில் 163 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 09 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## காலம் தாழ்த்தாது நீதி கிடைக்க புதிய எம்.பிக்கள் முன்வரவேண்டும்

### காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வேண்டுகோள்



கொழும்பு, ஜூலை 26

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் புதிதாக தெரிவு செய்யப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கள் போராட்டத்துக்கும், கவலைகள், கண்ணீருக்குக் காலம் தாழ்த்தாது நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்று மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைப்பின் செயலாளர் பி.சர்மிலா மடுத்தீன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியையும், உண்மைத் தன்மையையும் வெளிக்கொண்டு வரும் வகையில் தேர்தல் பரப்புரைகளை முன்வைத்து வாக்குறுதிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

குறித்த செயற்பாடுகள் அரசிற்கு ஓர் அழுத்தத்தைக் கொடுப்பதாக இருந்தாலும், இப் பரப்புரை மற்றும் தேர்தல் வாக்குறுதிகள் வெறுமனே தேர்தலில் வாக்குகளை சுவிகரிப்பதற்காக மட்டும் அல்லாது எமது உறவுகளின் ஏக்கங்களையும், காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளையும், கணவனையும் பறிகொடுத்து நிற்கும் எங்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான வாக்குறுதிகளாக அமைய வேண்டும்.

தேர்தலின் பின்பு மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிக்கு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களுக்கான நிரந்தரமான ஒரு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். அரசிற்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும்.

நீதியுடன் செயற்பட வேண்டும். அத்துடன் இவர்கள் சர்வதேசத்தின் ஊடாகவோ அல்லது உள்ளூர் பொறிமுறைகளூடாகவோ பாதிக்கப்பட்ட எமக்கு சார்பாக நின்று நீதிக்கான நிரந்தர தீர்வை பெற்றுத்தர வேண்டும் - என்றார். (ஐ-56)

## அரசாங்கத்துடன் கூட்டணி வைத்திருக்கும் ஐ.தே.கவை மக்கள் ஆதரிக்கமாட்டார்கள்

கொழும்பு, ஜூலை 26

ஐக்கிய மக்கள் சக்தி மீது கொண்டுள்ள அச்சத்தின் காரணமாகவே சிறிகொத்தாவுக்கு வந்தால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் இரகசிய கூட்டணி வைத்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியை இம்முறை மக்கள் ஆதரிக்கப்போவதில்லை என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்றுள்ளவர்கள் சிறிகொத்தாவுக்கு வந்தால் பொலிஸாரிடம் முறையிடுவதாக தெரிவித்துள்ளனர். அவர் மனதில் தற்போது அச்சம் ஏற்பட்டுள்ளது அதனால்தான் இவ்வாறு கூறியுள்ளார். அவர்களுக்கு ஆட்சியமைப்பதுடன் இருக்கும் ஆசனங்களையேனும் தக்கவைத்துக் கொள்ள முடியுமா என்று தெரியவில்லை.

கடந்த காலங்களில் அவர்கள் ஆளுந்தரப்பினருடன் இரகசிய கூட்டு வைத்திருந்தமையை நேரடியாகக் காண்பித்திருந்தனர். சிவப்புப் பட்டி அணிந்தவர்களைக் காப்பாற்றினர். தற்போது சிவப்புப் பட்டி அணிந்தவர்கள் இவர்களைக் காப்பாற்றி வருகின்றனர்.



சிறிகொத்தா யாருடையதும் தனிப்பட்ட சொத்து கிடையாது. அது ஆதரவாளர்களுக்கானது. ஓகஸ்ட் 6 ஆம் திகதிக்கு பின்னர் சிறிகொத்தாவுக்கு என்ன நடக்கும் என்பதை அவதானியுங்கள். இனியும் இந்த இரகசிய அரசியலுக்கு மக்கள் ஆணை வழங்க மாட்டார்கள் - என்றார். (ஐ)

# தலைவர் மக்களை நம்பியே கூட்டமைப்பை உருவாக்கினார்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 26
தலைவர் கூட்டமைப்பை உருவாக்கியது அரசியல்வாதிகளை நம்பியல்ல. தமிழ் மக்களை நம்பியே என்று ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சி நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் தமது ஆட்சி அதிகாரங்களைத்தக்க வைத்துகொள்வதற்காக தமிழ் சிங்கள இனங்களிடையே மொழி வாதம் இனவாதங்களைத் தூண்டி தமிழர்களை சிங்கள மக்களிற்கு பிரிவினையாளர்களாக காட்டி தமிழர்களுக்கெதிராக போர்ப்பிரகடனம் செய்தது.

மூன்று தசாப்தங்களாக நீடித்த பெரும் போர்களால் மனிதப் பேரழிவுகளுடனும் ஆறாத ரணங்களுடனும் போர் முடிவுக்கு வந்தாயிற்று. போர் நடைபெற்ற காலங்களில் சர்வதேச தலைவீடுகளுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் பேசப்பட்டன சில இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டிருந்தன. சடுதியாக முடித்து வைக்கப்பட்டிருந்த ஆயுதப்போர் தமிழர்களின் பேரம் பேசும் பலத்தை இல்லாமல் செய்துவிட்டது.

எமது எதிர்கால சந்ததிகள் தமது சொந்த நிலத்தில் கௌரவமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு வழியேற்படும்.

இந்தத் தேர்தலிலே தமிழர்களது அரசியல் பலத்தை உடைத்து எங்களை ஒரு பலவீனமான சமூகமாக உலகுக்கு காட்டி ஓர் அரைகுறைத் தீர்வை தமிழர்கள் மீது திணிக்க சிங்களதேசம் கங்கணம் கட்டி நிற்கின்றது அதற்காகவே அபிவிருத்தி என்றும், அமைச்சர்கள் என்றும் தாங்கள்தான் மாற்று அணி என்றும் மாபெரும் நடிகர்களும் துணை நடிகர்களும் நாடக நடிகர்களும் தமிழர் தேசமெங்கும் திருவிழாக்கால மணிக்கடைகளை நிறுவியிருக்கிறார்கள்.

எமது இனத்தின் தன்மான இருப்பிற்காக ஆயுதமேந்தியவர்கள் என்கின்ற உரித்தோடு கூறிக்கொள்கிறோம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவரால் தமிழ் மக்களது எதிர்கால அரசியல் இருப்புக்காக உருவாக்கப்பட்டது. மிகவும் கவனத்துடனும் தூர நோக்கோடும் அது உருவாக்கப்பட்டது. தமிழர்களது உரிமைசார் விடயங்களில் விட்டுக்கொடுப்பில்லாத இந்த இறுக்கமான தமிழ்த் தேசிய பலம்தான் காலத்திற்குகாலம் கூட்டமைப்புக்குள் இருந்து பலவீனமானவர்கள் பிரித்தெடுக்கப்படுகிறார்கள். இருந்தும் அவர்களை எமது மக்கள் மிகத்தெளிவாக இனங்கண்டு தோற்கடித்து விடுகிறார்கள்.

தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்கான அத்தனை நாசகார வேலைகளையும் முடித்து விட்டு சிங்கள தேசம் காத்திருக்கிறது. அவர்களுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் தமிழர்களது வாக்குப் பலத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெற ஒன்றிணைந்து செயல்படுங்கள் - என்றுள்ளது. (எ- 110)

# ரணிலுக்கு பிறகு நானே தலைவர்!

## செத்தாலும் ஐ.தே.கவில்தான் சாவேன் என்கிறார் நவீன்



**கொழும்பு, ஜூலை 26**
**வென்றாலும், தோற்றாலும் வேறு கட்சிகளுடன் இனி அரசியலில் ஈடுபடமாட்டேன். செத்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராகவே சாவேன். நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களைப் பாதுகாப்பேன். - இவ்வாறு ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.**

நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிதுள்ளதாவது:

ஐக்கிய தேசியக்கட்சிதான் அதிக ஜனநாயக பண்புகளைக்கொண்ட கட்சியாகும். தலைவர் பதவிக்குக் கூட வாக்கெடுப்பு மூலமே உறுப்பினர் தெரிவு செய்யப்படும் நிலைமை காணப்படுகின்றது. வேறு எந்தக் கட்சியிலும் இரகசிய வாக்கெடுப்பு நடைபெறுவதில்லை. இதற்கு முன்னரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பலர் பிரிந்து சென்றனர். எனது தந்தை பிரிந்து சென்றார். டி.எஸ். சேனாநாயக்கவின் பேரனான ருக்மன் சேனாநாயக்கவெளியேறினார். ஆனால், கட்சிக்குப் பெரும் தாக்கம் எதுவும் ஏற்படவில்லை. இம்முறையும் அப்படிதான்.

வேறு எந்தவொரு கட்சிக்கும் இனி செல்லக்கூடாது என்ற கொள்கையுடன்தான் ஐக்கிய தேசியக்கட்சிக்கு மீண்டு வந்தேன். தற்போது எனக்கு 50 வயது. இன்னும் 20 வருடங்கள் உயிர் வாழ்வேன் என நம்புகின்றேன். அதுவரையில் ஐக்கிய தேசியக்கட்சியில்தான் இருப்பேன். கட்சி ஆதரவாளர்களை பாதுகாப்பேன். மரணிக்கும் நொடியில்கூட ஐ.தே.க. உறுப்பினராகவே இருப்பேன். ரணில் விக்கிரம சிங்கவுடன் இணைந்த தான் நான் பயணிப்பேன். அவருக்கு பின்னர் தலைமைப்பதவியை ஏற்கும் எண்ணம் உள்ளது. அது ஜனநாயக முறைப்படி நடக்கும். இதற்கு ரணிலும் ஒத்துழைப்பார் என நம்புகின்றேன். என்றார். (எ-44)




# பொதுஜன பெரமுனவுக்கு இம்முறை அமோக வெற்றி

## மஹிந்தானந்த நம்பிக்கை



பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன அமோக வெற்றியைப்பெறும். ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியும் படுதோல்வியைச் சந்திக்கும்.

இவ்வாறு முன்னாள் ராஜாங்க அமைச்சரும் கண்டி மாவட்ட வேட்பாளருமான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்தமுறை பொதுத் தேர்தலானது ஒரு கட்சி அதிகளவான வாக்குகளைப் பெறும் தேர்தலாக இருக்கும். ஜனாதிபதியும் பிரதமரும் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு அரசியல் பேதமின்றி ஆதரவளிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு நாட்டில் இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியினரில் பலர் தற்போது ஜனாதிபதியை ஆதரிக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளது. ஐந்தாண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் ஆட்சியில் இருந்தது எனினும் எதனையும் செய்யவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் எதனையும் செய்யவில்லை. தலைவர் பதவிக்கு உள்ள போராசையில் சஜித் கட்சிக்குள் மோதலை ஏற்படுத்தினார். ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தி தனிக் கட்சியை ஆரம்பித்தார். சஜித் பிரேமதாசவே ஐக்கிய தேசியக் கட்சியின் மீது வெறுப்பை ஏற்படுத்தினார். ஐக்கிய தேசியக் கட்சியினர் தற்போது வாக்களிக்க ரணிலும் இல்லை சஜித்தும் இல்லை. அவர்கள் யானைக்கோ, தொலைபேசிக்கோ வாக்களிக்கமாட்டார்கள். அவர்கள் தாமரை மொட்டுச் சின்னத்திற்கேவாக்களிப்பார்கள்.

ஜனாதிபதித் தேர்தலின் போது சஜித் பிரேமதாசவுடன் இருந்த தமிழ், முஸ்லிம் மக்கள் தற்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவுடன் இணைந்துள்ளனர். இந்தமுறை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 150 ஆசனங்களைக் கைப்பற்றும். ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியும் படுதோல்விடையும் - என்றார். (எ)

# நாட்டைப் பிளவுபடுத்துகின்ற செயற்பாட்டில் மஹிந்த அணி!

## சாடுகின்றார் ஜனகன்



கொழும்பு, ஜூலை 26
நாடாளுமன்றத் தேர்தல் நெருங்க நெருங்க அரசியல் வாதிகள் பலரின் உண்மை முகங்கள் வெளித் தெரிகின்றன. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அணி ஆரம்பித்துள்ள முயற்சிகள் இப்போது சமூகத்தில் பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் கலாநிதி வி. ஜனகன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மஹிந்த அணியினர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதன் காரணம் என்ன என்பதைத் தேடிப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களை அவதானிக்கும்போது மஹிந்த அணியின் செயற்பாடுகள் மற்றும் சமூகத்தில் அவர்கள் காட்டும் இரட்டை முகம் என்பன தற்போது தெட்டத் தெளிவாக வெளிப்பட ஆரம்பித்துள்ளன.

வெறுமனே பௌத்த வாதத்தை முன்னிறுத்தியே மஹிந்த அணியினர் செயற்பட்டு வருகின்றனர். தற்போது ஏனைய இனத்தவர்களையும், பிற மதங்களைச் சேர்ந்தவர்களையும் இழிவுபடுத்தும் செயற்பாடுகளையும் இந்த அணியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நாட்டை கட்டியெழுப்புவதே தமது நோக்கம் என்று கூறிக் கொண்டு மறுபுறத்தில் அவர்கள் செயற்படுத்துகின்ற அனைத்துத்திட்டங்களையும் நோக்கும்போது நாட்டைத் துண்டாடுகின்ற அரசியல் போக்கைக் கடைபிடித்து வருகின்றார்களா என்ற கேள்வியே எழுகிறது- என்றார். (எ)




# செம்மலையில் சிறப்புற்றது பாரம்பரிய பொங்கல் நிகழ்வு

முல்லைத்தீவு, ஜூல 26

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவில் பொங்கல் நிகழ்வு பாரம்பரிய முறைப்படி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பாரம்பரிய முறைப்படி மடைப்பண்டங்கள் கொக்குத்தொடுவாய் கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்டு. பொங்கல் சடங்குகள் ஆரம்பமாகி பொங்கல் நிகழ்வுகள் நடைபெற்றன.

கொரோனாத் தொற்றைக் கருத்திற்கொண்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொங்கல் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இதற்காக 50 பக்தர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## போதைப்பொருள் விநியோகம் 6 பேர் கைது



கொழும்பு, ஜூலை 26

ஹெரோய்ன் போதைப்பொருள் விநியோகத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேர் பொறளஸ்கமுவ பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து போதைப் பொருள் விற்பனையில் பெற்றுக்கொண்ட 10 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணமும், ஒரு கிலோ 45 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், போதைப்பொருள் விற்பனைக்காக சந்தேகநபர்கள் பயன்படுத்திய சிற்றூர்தி, முச்சக்கரவண்டி, உந்துருளி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. மிரிஹான விசேட விசாரணைப் பிரிவு அதிகாரிகள் நேற்றுக்காலை நடத்திய சுற்றிவளைப்பில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் மிரிஹான, பொறளஸ்கமுவ, ஹொரனை முதலான பகுதிகளில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (து)

# தேர்தல் கண்காணிப்பு பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 26



சுதந்திமானதும் நீதியான துமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பினரின் தேர்தல் கண்காணிப்புத் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

'சமாதானமான தேர்தலை நோக்கி' என்ற தொனிப்பொருளின் கீழ் கபே அமைப்பு நடத்திய குறித்த கலந்துரையாடல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.தினேஸ் தலைமையில் நடைபெற்றிருந்தது.

இதன்போது கண்காணிப்புத் தொடர்பான தெளிவுபடுத்தல், தேர்தல் விதிமுறைகள், சுகாதார நடைமுறை போன்றன தெளிவுபடுத்தப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கபே அமைப்பின் பணிப்பாளர் அகமட் மனாஸ், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் ரா.மனோராஜ் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், கண்காணிப்பாளர்கள் மற்றும் இளையோர் கலந்து கொண்டிருந்தனர். (த-20)

## பணத்தைத் திருட முயன்ற பொலிஸார் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 26

பெண் ஒருவரின் பயணப் பையிலிருந்த பணத்தைத் திருடுவதற்கு முயன்றார் என்னும் குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை மொரட்டுவையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் மிரிஹான பொலிஸ் பிரிவிலுள்ள பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிளாவார். கடந்த வியாழக்கிழமை காலை காலியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் ஒன்றில் பயணித்த பெண் ஒருவரின் பயணப் பையிலிருந்த பணத்தையே கான்ஸ்டபிள் திருட முயன்றுள்ளார் எனத் தெரியவருகின்றது. (ரி2)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை திங்கள் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** மருதனார்மடம் சந்தியிலிருந்து கொக்குவில் செம்பியன் லேன் வரை, இணுவில், மருதனார்மடம் சந்தியிலிருந்து இணுவில் ரயில் நிலையம் வரை, பாலாவோடை, இணுவில் கந்தசாமி கோவில், துரை வீதி, உப்புமடம் சந்தி, உப்புமடம் சந்தியிலிருந்து கோண்டாவில் புரயில் நிலையம் வரை, முத்தட்டு மடம் வீதி, தாவடி, பத்தனை, சுதுமலை, மாப்பியன், விஜிதா மில் பிரதேசம் தாவடி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்**, புளிதறித்தபுளியங்குளம் கிராமம், அரபா நகர், செல்வநகர் கிராமம், செக்கட்டிப்புலவு ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## இன்றைய நாள்

**மேடம்:** குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழல் நிலவும். கணவன், மனைவி இடையே சின்ன சின்ன கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கு வீர்கள்.

**இடபம்:** நண்பர்கள் வீட்டுசுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். உறவினர்களின் மூலம் வீண்செலவுகள் ஏற்படலாம். தாயாரின் உடல் நலத்தில் அக்கறையுடன் இருப்பீர்கள்.

**மிதுனம்:** பணப் புழக்கம் எதிர்பார்த்ததை விட அதிகரிக்கும். நண்பர்கள் உங்களின் ஆலோசனைபடி செயற்படுவார்கள். பூர்வ சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் உண்டு.

**கடகம்:** தொழில், வியாபாரத்தில் லாபம் பெருகும். அலுவலகப் பணிகளை உற்சாக மனதுடன் செய்து முடிப்பீர்கள். பெண்களுக்கு உறவினர் மத்தியில் மரியாதை அதி கரிக்கும். கலைஞர்களின் திறமை பளிச்சி டும். எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும்.

**சிம்மம்:** பொதுநலப் பணியில் ஈடுபட்டு மகிழ்ச்சி காண்பீர்கள். பேச்சில் கவனம் தேவை. கணவன், மனைவி இடையே சின்ன சின்ன சண்டைகள் வந்தாலும் அது உடனடியாக தீர்ந்துவிடும்.

**கன்னி:** வருமானத்தை உயர்த்தப் புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வெளிநாட்டில் இருக்கும் நண்பர்களின் மூலம் நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதாயம் உண்டு.

**துலாம்:** தந்தையின் உடல்நலம் மேம்படும். பெண்கள் ஆடம்பரச் செலவு செய்வதில் மிகுந்த ஆர்வம் கொள்வர். நிலுவைப் பணிகளை முடிப்பதற்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர்.

**விருச்சிகம்:** பெண்கள் சோம்பலைத் தவிர்த்து துணிவுடன் செயல்படுவர். புதிய வேலை தேடுபவர்களுக்கு எதிர்பார்த்த வகையில் நல்ல செய்தி கிடைக்கும்.

**தனுசு:** சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். திடீர் பணவரவால் கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். வியாபாரத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும்.

**மகரம்:** மனைவியிடம் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பெற்றோரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திட்டமிட்ட சுப நிகழ்ச்சிகள் தள்ளிப் போனாலும் நல்லபடியாக முடியும்.

**கும்பம்:** சுபநிகழ்ச்சி பற்றிய பேச்சு வார்த்தைகளை இப்போதைக்கு தவிர்ப்பது நல்லது. முக்கியப் பொறுப்புகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம்.

**மீனம்:** மனதில் இனம் புரியாத பயம் வந்துப் போகும். சிலரின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும்.

# கொரோனா வைரஸ் ஆபத்து தொடரலாம்

## அரசை சாடுகிறார் சஜித்

**கொழும்பு, ஜூலை 26**



**கொரோனா வைரஸ் தாக்கத்தின் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது அலைகள் நாட்டில் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

நாவலப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் தொற்றுக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசால் உறுதியாகக் கூற முடியாது. சுகாதார அமைப்புக்குள் கடுமையான பிரச்சினைகள் இருக்கின்றன. கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்திய ஓர் அரசாகத் தங்களை அடையாளம் காட்டிக் கொள்ள அரசு முயற்சிக்கின்றது.

கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை தொடங்கியுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று ஆபத்து நாட்டுக்குள் பெரியளவில் இருக்கின்றது என்று கடந்த ஜனவரி மாதம் 24 மற்றும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் தெரிவித்திருந்த கருத்துக்களைக் கவனத்தில் எடுத்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது- என்றார். (எ)

# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஐ.தே.கவுக்கு வாக்களியுங்கள்

## கோருகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 26



ஐக்கிய தேசியக் கட்சி என்பது டி.எஸ்.சேனாநாயக்க தொடக்கம் பல்வேறு மூத்த தலைவர்களினால் வழிநடத்தப்பட்ட நீண்ட பாரம்பரியத்தையுடைய கட்சியாகும். ஐக்கிய மக்கள் சக்தி என்பது அதன் ஓரங்கம் அல்ல. அது மக்கள் விடுதலை முன்னணி, பொதுஜன பெரமுன போன்று வேறொரு தனியான கட்சியாகும்.

எனவே இவ்விரு கட்சிகளிலும் ஒரேநேரத்தில் அங்கம் வகிக்க முடியாது. ஐக்கிய தேசியக்கட்சியை இல்லாமல் செய்வதைத் தமது நோக்கமாகக் கொண்டவர்கள் வேறு கட்சியில் இணையவோ அல்லது ஆதரவளிக்கவோ முடியும்.

ஆனால் எமது கட்சியைப் பாதுகாக்க விரும்பும் உண்மையான ஆதரவாளர்கள் ஒருபோதும் அவ்வாறு செயற்பட மாட்டார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெல்லவாய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து சுமார் 9 மாதகாலத்தின் பின்னரே மீண்டும் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கப் போகின்றார்கள். புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியினாலும், அவரால் நியமிக்கப்பட்ட பிரதமர் மற்றும் அமைச்சரவையினாலும் நாட்டில் திடீரென்று ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு முகங்கொடுக்க இயலாமல் போயுள்ளது.

ஆரம்பத்தில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் எவருமில்லை என்று அரசாங்கம் பொய்யுரைத்தது. அதன் பின்னர் தற்போதுவரை வைரஸ் தொற்றுக்குள்ளான சுமார் 2700 இற்கும் அதிகமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இன்னும் சமூகத்தில் எத்தனை தொற்றாளர்கள் இருக்கின்றார்கள், எத்தனைபேர் அறிகுறிகளைக் கூறாமல் மறைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி எமக்குத் தெரியவில்லை.

அதேபோன்று இந்த நெருக்கடி ஏற்பட்டதும் மறுபக்கம் பொருளாதாரம் அதனை எதிர்கொள்ள முடியாமல் வெகுவாகத் தளம்பல் அடைந்திருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகையிலான ஆக்கபூர்வமான செயற்திட்டங்கள் எதனையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

இத்தகையதொரு சூழ்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு சவாலாகக் களமிறங்கியிருக்கும் நாம் பொருளாதாரத்தை மீண்டும் சீரமைப்போம் என்பதுடன், அதற்கான வாய்ப்பை ஒருமுறை எமக்கு வழங்குங்கள் என்றே மக்களிடம் கோருகின்றோம். என்றார். (ஐ)

# அரசியல் நோக்கத்துக்காகவே விசாரணை நடத்துகின்றனர்

கொழும்பு, ஜூலை 26



தங்களுடைய அரசியல் வளர்ச்சிக்காகவும், மூன்றில் இரண்டுபெரும்பான்மையைப் பெறுவதற்காகவும் நேரத்தை வீணடித்து விசாரணைக்கு அழைக்கின்றனர். எங்கள் கட்சிப்பிரதிநிதிக்கு திருகோணமலையில் அளிக்கும் வாக்குகள் இனவாதிகளுக்கு விமல் வீரவன்ச போன்றவர்களுக்குக் கொடுக்கும் சாட்டையடி.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன்.

திருகோணமலை ஜமாலியா பகுதியில் நேற்று நடத்தப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நாங்கள் நாட்டுப் பற்றுடன், சீராகவும், தூய்மையாகவும் வாழ்கின்றவர்கள். எமது பயணம் சீரானது. அப்துல்லா மஹ்றூப்பை வெற்றியடையச் செய்யுங்கள். என்னை எந்தவித குற்றமும் இல்லாமல் சிறைப்படுத்த அடிமைப்படுத்த நினைக்கிறார்கள். இறைவன் எம்மை பாதுகாப்பான் இறைவனைத் தவிர யாருக்கும் அஞ்ச மாட்டேன் - என்றார். (எ)

# புதையல் தேடியே ஐ.தே.கவை அழித்தார் சஜித்

## குருநாகலில் ஜயரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

சஜித் பிரேமதாச புதையல் தேடியதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி சீரழிந்து போனது என்று முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான ஜயரத்ன ஹேரத் தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவத்தகமை, வெவகெதர பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஒழுக்கமானவர்களை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்ப வேண்டிய கடமை மக்களுக்கு இருக்கின்றது. கடந்த நல்லாட்சி அரசாங்கம் எம்மிடம் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பறித்துக் கொண்டது. ஏற்பட்ட அரசியல் சூறாவளியில் நாங்கள் புதிய கட்சியைத் தொடங்கி, புதிய அரசியல் பயணத்தை ஆரம்பிக்க நேரிட்டது. வலுவான நாடாளுமன்றத்தை ஜனாதிபதி அமைத்துக் கொடுக்க வேண்டிய சவால் எமக்குள்ளது. சஜித் பிரேமதாச போன்ற மந்த புத்தியுள்ளவர்கள் அனைத்து அரசாங்கங்களிலும் இருப்பார்கள் - என்றார். (எ)

# கூட்டமைப்பின் பலத்தை மக்கள் கூட்ட வேண்டும்

## சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை

வவுனியா, ஜூலை 26

இராணுவ அதிகாரி ஒருவரைத் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராக்கினால் எமது இருப்புக் கேள்விக்குறியாகும் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சார்ள்ஸ் நிர்மலநாதன்.

வவுனியா, ஈச்சங்குளத்தில் நடத்திய மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

போர் முடிந்த பின்னர் தலைமைத்துவம் இல்லாத இனமாக நாம் வாழ்கின்றோம். எமது பலம், எமது இருப்பு, எமது கலாசாரம், எமது அடையாளம் என அனைத்தையும் இணைத்துப் பயணிக்க வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. நாங்கள் எங்கள் ஒற்றுமையை நிலைநிறுத்தாவிட்டால் எமது இனம் பெரியதொரு கேள்விக்கு உட்படுத்தப்படுவதுடன், சவாலுக்கும் உட்படுத்தப்படும்.




இந்தப் பகுதியில் இராணுவ அதிகாரியை அல்லது சிங்களவர் ஒருவரை வன்னி மக்களால் தெரிவு செய்வதற்கு கோத்தாபய ராஜபக்ஷ அரசு முயற்சிக்கின்றது. எங்களுடைய பிரதேசத்தில் இராணுவத்துடன் சம்பந்தமில்லாத பல விடயங்களுக்கு இராணுவம் சம்பந்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நாம் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்காவிட்டால் அது சிங்கள அல்லது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரையே கொண்டுவர வழிவகுக்கும். தமிழ் தேசியக்கூட்டமைப்பில் இருந்து பிரிந்தவர்கள் மக்கள் நலன் சார்ந்து பிரியவில்லை. நாம் நாடாளுமன்றத்தில் எமக்குள்ள பலத்துக்கு அமைய மக்கள் நலன் சார்ந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். மக்கள் எமக்கான பலத்தை அதிகரிக்க வேண்டும்- என்றார்.

(எ-110)

# தேர்தல் பரப்புரைக்காக இதுவரை ரூ. 70 கோடி

## கட்சிகள் செலவிட்டுள்ளன என்கின்றது 'கபே'



முக்கிய அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் பொதுத் தேர்தலுக்கான பரப்புரைக்காக 70 கோடிக்கும் அதிகமான மறைமுக செலவினங்களை இரண்டு வார காலத்தினுள் (ஜூலை 2 முதல் 15 வரை) செலவிட்டுள்ளனர். என அந்த நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார். தேர்தலில் கிட்டத்தட்ட 7ஆயிரத்து 500 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அரசியல் கட்சிகளின்படி செலவினங்கள் குறித்து அறிக்கை தொகுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த மதிப்பீடு 20 தொடக்கம் 30 விகித செலவினங்களை மட்டுமே உள்ளடக்கியது என்றும், துல்லியமாக மதிப்பிடக்கூடியதைவிட அரசியல் கட்சிகள் மிகப் பெரியளவிலான செலவினங்களைச் செய்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்தியே அதிகளவிலான செலவுகளை மேற்கொண்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி இதுவரை 18.5 கோடி ரூபா வைச் செலவு செய்துள் ளது. மொத்தமாக மதிப்பிடப்பட்ட செலவினத்திலிருந்து, 16.8 கோடி ரூபா இலத்திரனியல் ஊடக விளம்பரங்களுக்காகவும், 60 லட்சம் ரூபா அச்சு ஊடகங்களுக்காகவும், 20 லட்சம் ரூபா சமூக வலைத்தளங்களிலும், 90 லட்சம் ரூபா பிற செலவுகளுக்காகவும் ஐக்கிய மக்கள் சக்தி செலவிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியை அடுத்து ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கடந்த இரண்டு வார காலப்பகுதியில் மொத்தம் 15.1 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது. அந்தவகையில் இலத்திரனியல் ஊடக விளம்பரத்துக்காக 10.7 கோடி ரூபாவும் அச்சு ஊடகங்களுக்கு 1.9 கோடி ரூபாவும் சமூக வலைத்தளங்களுக்கு 50 லட்சம் ரூபாவும் ஏனைய செலவினங்களுக்காக 2 கோடி ரூபாவும் செலவிட்டுள்ளது.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் செலவு 12.3 கோடி ரூபா என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையம் கணித்துள்ளது. இந்தத் தொகையில் 11.1 கோடி ரூபா இலத்திரனியல் ஊடக விளம்பரங்களுக்காகவும் ஒரு கோடி ரூபா அச்சு ஊடகங்களுக்காகவும், தலா 10 லட்சம் ரூபா சமூக வலைத்தளங்கள் மற்றும் பிற செலவுகளுக்காகவும் செலவிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தேசிய மக்கள் சக்தி 3.6 கோடி ரூபாவும் அபே ஜனபல வேகய 1.3 கோடி ரூபாவும் செலவிட்டுள்ளன.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு வாரங்களில் 50 லட்சம் ரூபா செலவிட்டுள்ளது. அதே நேரத்தில் குறைந்த பரப்புரைச் செலவுகளை மேற்கொண்ட கட்சியாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (10 லட்சம் ரூபா) உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட பொறிமுறை

## வேட்பாளர் ஆனல்ட் வலியுறுத்தல்

கிளிநொச்சி, ஜூலை 26

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டியதே எமது முதல் கடமை. அதற்காக நிச்சயம் முயற்சிப்போம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் இம்மனுவல் ஆனல்ட் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: முப்பது வருட யுத்தம் நிறைவுக்கு வந்து பதினொரு வருடங்கள் கடந்திருக்கின்ற நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய ஏற்பாடுகள் எதுவும் இதுவரை நிறைவாக வழங்கப்படவில்லை என்பதை வேதனையோடு ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். நடைபெற்ற போரால் பல குடும்பங்கள் பெண் தலைமைக் குடும்பங்களாக்கப்பட்டுள்ளன. பலர் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் மாற்றுவலுவுடையோர்களாக வாழ்ந்து வருகின்றனர், ஏராளமான இளைஞர் யுவதிகள் எவ்வித தொழில் ஏற்பாடுகளுமின்றி வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாது சிரமப்படுகின்றனர். மேற்படி போரால் பாதிக்கப்பட்ட ஒட்டு மொத்த குடும்பங்களினதும் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டிய எமது தலையாய கடமையாக கண் முன்னே இருக்கின்றது. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய வாழ்வாதார பொறிமுறையை அவசரமாக உருவாக்க வேண்டியுள்ளது - என்றார். (ம)



X 4
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடக்கு கிழக்கில் தனி ஆட்சி தன்னிறைவான பொருளாதாரம் என்பதில் அசைக்க முடியாத உறுதி

கல்வியே தமிழர்களின் சொத்து என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை அதனால் கல்வியை வளர்ப்பதில் அதிகூடிய அர்ப்பணிப்புடன் கூடிய பற்றுறுதி

துன்பப்படும் மக்களுக்கு ஓடிச் சென்று எந்த நேரத்திலும் எந்த இடரிலும் உதவும் மனம் கொண்ட மகத்துவன்

4



ஈ.சரவணபவன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உதயன் குழுமத் தலைவர்

வள்ளல் பெருந்தகை அரசியல் மூலம் பணம் சேர்க்காத பெருந்தகை உதவி கேட்டு வருவோருக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும் வள்ளல்

30 வருடங்களாக ஒரே கொள்கையுடன் எத்தனை தடைகள் வரினும் தொடர்ந்து உதயன் பத்திரிகையை வெளியிட்டுவரும் ஊடகப் போராளி

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 30 . 03 . 1936

இறப்பு 26 . 06 . 2020

அமரர் திருமதி


### தம்பிராசா செயரட்ணம் (துரையம்மா)

கடந்த 26.06.2020 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத்தெய்வம் திருமதி தம்பிராசா செயரட்ணம் (துரையம்மா) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.07.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 11 . 1976

இறப்பு 23 . 07 . 2020

### சுகுமாரன் சுகேந்திரன்

கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுகுமாரன் சுகேந்திரன் 23.07.2020 அன்று அகாலமரணமானார்.

அன்னார் சுகுமாரன் - நாகேஸ்வரி (கனடா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சந்திரன் மற்றும் கனகம்மா (தேவி) தம்பதியரின் பாசமிகு மருமகனும், சுகிர்தாவின் (தங்கா) அன்புக் கணவரும், சஜீத்தின் பாசமிகு அன்புத் தந்தையும், சுதர்சன் (கனடா), சுடர்விழி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரமேஸ், சுஜாத்தா, ரதீஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று சைவ வாலிபர்சங்க சனசமூக நிலைய குழந்தைவேல் கலை அரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொந்தனை இந்து மயானத்திற்கு பூதவுடல் நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C. 32910) (13.17)

076 110 3106

## மரண அறிவித்தல்



### திருமதி தோமஸ் சிவபாக்கியம்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், இல.85, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தோமஸ் சிவபாக்கியம் நேற்று (25.07.2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான வெலிச்சோர் தோமஸ் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் மற்றும் தங்கம்மாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவரான சின்னையாவின் மைத்துனியும் மற்றும் தவமணி தேவி, மனோரஞ்சிதம் (ஆனந்தி), வசந்தராணி (ரதி), கருணானந்தன் (பிரான்ஸ்), சாந்தகுமாரி (வசந்தி) விஜயகுமார் (உதயன் - சுவிஸ்), ஜெயராணி (கௌரி), சிவகுமார் (குகன் - கனடா), ஸ்ரீகுமார் (கண்ணன் - பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், குலசேகரம்பிள்ளை, ஜீவரெத்தினம், பாலரெத்தினம் (பாலன்) மற்றும் மகேந்திரலிங்கம் சுகுமாரி (ராதா - பிரான்ஸ்), தயாளினி (பேபி - சுவிஸ்), கௌரி (கனடா), சசிமாலா (மாலா - பிரான்ஸ்) ஆகியோாரின் அன்பு மாமியாரும் நிர்மலா, சாரதா (ஜேர்மனி) ஆகியோரின் பெரியதாயாரும் யோகராசா (பிரான்ஸ்), சியாமளா (ரேணுகா), கிரிதரன் மோகனதாஸ், முருகதாஸ் (பாபு), கமலதாஸ் (கோபு), காலஞ்சென்ற உதயஸ்ரீ மற்றும் ஞானதாஸ் (பிரபு), உதயகுமாரி, ஜீவதிவாகரன் (ரமேஸ் - பிரான்ஸ்), சுதாகரன் (கோபி), ஜனனி, நிலானி, சிவானி (பிரான்ஸ்), சரண்ஞ்யா, பானுகோபன் (பிரான்ஸ்), சோதிகா, ரூபிகா, ஜீவன், யசிந்தன், விதுஷா (சுவிஸ்), சுகன்யா, கௌதமன், காலஞ்சென்றவரான ஐஸ்வரியா மற்றும் சுபீட்ஷா, அனுட்சிகா (கனடா) காலஞ்சென்ற மகீபன் மற்றும் காலேப் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு நடைபெற்று 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.85, கோவில் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 077 1147 441

தகவல்:-
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 08 . 1950

இறப்பு 24 . 07 . 2020

### சாமிநாதன் இராசம்மா

யாழ்ப்பாணம் பூநாரி லேன், கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சாமிநாதன் இராசம்மா கடந்த (24.07.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தனாச்சாரி -முத்தம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான பக்கிரிசாமி - சம்பூர்ணத்தம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சாமிநாதன் (பத்தர்) அவரின் பாசமிகு மனைவியும், அபிராமி, அருணாசலம், ஆனந்தன், சரஸ்வதி, ஜனாகி, நாகராசா, இராதா கிருஸ்ணன், காலஞ்சென்றவர்களான தியாகராசா, கமலா ஆகியோரின் சகோதரி யும் சந்திரசேகர், லலிதா, ராகவன், ராஜராஜன், முருகானந் (நகைத் தொழில்), உமா, ஜெயகௌரி (வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற விஜயகுமார், சசிதரன், கோபிகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தனோயன், ருபேந்தினி, லிசாய்னன், சர்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மைத்துனர்மார்களின் மைத்துனருமாவார்.

